பக்கங்கள்-16 18.மாசி.2024 விலை-50.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி,
புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 432



## சகோதரப் படுகொலையே தமிழீழக் கனவை சிதைத்தது – அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

## கூட்டமைப்பைப் பிளவுபடுத்திய சுமந்திரனே தமிழரசுக் கட்சியையும் பிளவுபடுத்தினார்

## ஒரு பல்கலைக்கழகமும் ஒரு இசை நிகழ்ச்சியும் – நிலாந்தன்

A. KUNARATNAM
TYRE CENTER
NO: 142/1, HORAPATHANA ROAD, VAVUNIYA. TEL: 222 1574 / 0778951584. வவுனியா


# சகோதரப் படுகொலையே தமிழீழக் கனவை சிதைத்தது

**ஈ.பி.டி.பி கட்சியின் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தினப்புயலுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்**

**கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையில் இலங்கையில் ஆட்சிமாற்றமொன்று ஏற்பட்டு, ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், கொவிட் தொற்று முடிவுக்கு வந்து "அரகல" போன்ற பாரிய மக்கள் போராட்டங்கள் முடிவுக்கு வந்து தற்போது பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாடு நகர்கின்ற இந்தச் சூழலில், தற்போதைய அரசில் நீங்களும் இணைந்து பயணித்துக்கொண்டிருக்கின்ற நிலையில், தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் இந்த அரசாங்கம் செல்கின்ற பாதை எப்படி இருக்கின்றது?**

**பதில் :** முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள் நாட்டு மக்களின் அதிகூடிய வாக்குகளின் எண்ணிக்கையில் பதவிக்கு வந்தவர். துரதிஸ்டவசமாக நாட்டுச் சூழல்களை அவர் கையாள முற்பட்ட அணுகுமுறைகள் அவருக்கு பின்னடைவைக் கொண்டுவந்ததனால் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி பதவியினை அவர் இழக்க நேரிட்டது அல்லது மக்களுக்கு மேலும் துன்பம் கொடுக்கக்கூடாது, அழுத்தங்கள் கொடுக்கக்கூடாது என்பதற்காக அவர் பதவியினைவிட்டு வெளியேறிவிட்டார். அவர் இருக்கிற அதேகாலகட்டத்தில் நாட்டின் பொருளாதார நிலைமைகள் காரணமாக ரணில் விக்கிரமசிங்க அவர்களால் தான் இந்த நாட்டின் நிலைமைகளை முன்னெடுக்க முடியும் என்கிற எண்ணத்தோடு எங்கள் அனைவருடனும் கலந்துரையாடி அவரை நாட்டின் பிரதமராக தெரிவுசெய்தார். நாங்கள் அனைவரும் அதற்காக முழு ஆதரவு வழங்கினோம். நான் கூட அவரை விரும்பினேன் ஏனென்றால் இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய தலைவர்களுக்குள் அவரால் தான் இவற்றையெல்லாம் செய்து முடிக்க முடியும் என்று நான் நம்பியதால் முன்னின்று முழுமையாக ஆதரவு வழங்கினேன்.

பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள் தன்னுடைய பதவியினைக் கைவிட்டு வெளியேறியபோது நாட்டினைப் பொறுப்பெடுக்கக்கூடிய நிலைமையில் யாரும் இருக்கவில்லை. அந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் முன்வந்தபோது நானும் ஊக்குவிப்பாக தனிப்பட்ட முறையிலும் பொது வெளியிலும் அவரைத் தான் கொண்டுவரவேண்டும், அவரால் தான் செய்ய முடியும் என்பதை முன்வைத்தேன். அது அரசியல் உரிமைப் பிரச்சினையாக இருக்கலாம். அபிவிருத்தியாக இருக்கலாம். பொருளாதாரப் பிரச்சினையாக இருக்கலாம் அல்லது அன்றாடப் பிரச்சினைக்கானத் தீர்வாக இருக்கலாம். அவரால் தான் செய்ய முடியும். எனக்கும் இந்த அரசியலில் நீண்டகால அனுபவங்கள் இருக்கின்றது. இன்றைய நிலையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் ஒரு மூத்த அமைச்சர் என்கிற ரீதியில் பொறுப்பும் வகிபாகமும் எனக்கும் இருக்கின்றது. அந்தவகையில் நானும் அவரை விரும்பி அவருக்கான பிரச்சாரங்களை வெளிப்படையாக மேற்கொண்டேன்.


"அரகல" தொடர்பான விடயங்கள் நாட்டுக்கு அழிவினையே ஏற்படுத்தும். ஆகையால் அதனைக் கட்டுப்படுத்த வேண்டும். கட்டுப்படுத்தாவிட்டால் நாடு முன்னைய நிலைமையைவிட இன்னும் மோசமான நிலைக்குச் சென்றுவிடும் என்பதை நான் உள்ளுக்கும் வெளியிலும் வலியுறுத்தியிருந்தேன். என்னுடைய எதிர்பார்ப்பினைப் போல அவர் இந்த நாட்டினை பொறுப்பெடுக்க முன்வந்திருக்கிறார் அல்லது பொறுப் பெடுத்திருக்கிறார். அதாவது ஒரு பிரேக்டவுன் வாகனம் போல. ஆனால் இந்த குறுகிய வருட காலத்திற்குள் அதற்கான பிரேக் அனைத்தும் ஒழுங்குபடுத்தி டயர்கள் போட்டு வண்டியை ஓடவிட்டிருக்கிறார். நல்லதொரு ரீகண்டிசன் வண்டியாக மாற்றக்கூடிய விதத்தில் வண்டி தற்போது ஓடிக்கொண்டிருக்கிறது. இன்னுமொரு ஒன்றரை இரண்டு வருடத்திற்குள் அவர் டிங்கரிங், வயரிங், பெயிண்டிங் எல்லாம் செய்துவிட்டால் எங்களுக்கு ஒரு நல்ல வண்டி கிடைக்கும் என நான் நம்புகிறேன்.

**கேள்வி : ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பாராளுமன்றத்தின் ஊடாக நாட்டின் ஜனாதிபதியாக வந்திருந்தாலும், நீங்கள் கூறுவதைப்போல யாரும் நாட்டினை பொறுப்பெடுக்காத நிலையில் தானே முன்வந்து நாட்டினை பொறுப்பெடுத்து அபிவிருத்திப் பாதையில் பொருளாதாரச் சரிவில் இருந்து நாட்டினை மீட்டெடுக்கக் கூடியவர் என்கிற விடயங்கள் இருந்தாலும், தற்போது அவரின் செயற்பாடுகள் தனது பலமிழந்துபோயுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினைப் பலப்படுத்தி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்களின் வாக்குகளைப் பெற்று பதவியினைப் பிடிப்பது என்கிற நோக்கமும், நாட்டில் மீளவும் மக்கள் கொந்தழித்துக் காணப்படும் நிலையும் காணப்படுகிறதே! இது குறித்து?**

**பதில் :** அவர் ஆற்றல் உள்ளவர், கெட்டிக்காரர் என்று தான் நான் கூறுவேன். நான் அவருடைய அமைச்சரவையில் இருக்கிறேன் என்பதற்காகவோ அல்லது நாட்டின் தலைவர் என்பதற்காக கூறவில்லை. ஆகவே அப்படியானவர் தான் இன்று இந்த நாட்டிற்குத் தேவை என்பதுதான். நானே அவருக்கு நீங்கள் ஒரு பெரலுடன் வந்தீர்கள் ஆனால் இன்று மல்டி பெரலுடன் இருக்கிறீர்கள் என்று நகைச்சுவையாகக் கூறியிருக்கிறேன். இந்த நாட்டினையும், நாட்டு மக்களையும் தொடர்ந்து பாதுகாக்க நீங்கள் பயணிக்கவேண்டும் என்பதையும் நான் அவரிடத்தில் கேட்டிருக்கிறேன்.

இதில் தந்திரங்கள் என்று கூறும்போது பொதுவாக அரசியலிலோ, தனிப்பட்ட அல்லது பொது வாழ்க்கையிலோ அந்த முறைகள் கையாளப்படுவதுண்டு. என்னைப் பொறுத்தளவில் நான் அந்த முறைகளைக் கையாளுவதில்லை. அது சிலவேளைகளில் எனக்கு பின்னடைவைக் கூட தந்திருக்கலாம். என்னவென்றால் நான் நீண்டகாலமாகக் கூறிவருகிறேன். அதாவது உங்களைச் சந்தித்த காலங்களிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ நான் என்ன கூறிவந்திருக்கின்றேனோ அதுதான் இன்று நடந்து முடிந்திருக்கிறது, நடந்துகொண்டிருக்கிறது. 'பிரபாகரன் மக்களையும் அழித்து தங்களையும் அழிக்கப்போகிறார்' அது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்று கூறினேன். பிரபாகரன் தனிப்பட்ட முறையில் அழிந்துபோவது என்பது வேறு. ஆனால் பிரபாகரனுடன் இயக்கத்தில் இருந்தவர்கள், அவரது குடும்பத்தினர், இந்த மக்கள் அழியப்போகிறார்கள், மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகப் போகிறார்கள் என்பதை நான் நீண்ட காலமாக கூறிவந்தேன். பேச்சுவார்த்தைக்கு ஊடாகபிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்பதுதான் என்னுடைய நிலைப்பாடாகவிருந்தது.

நான் 1986ஆம் ஆண்டு மே மாதம் இந்தியா சென்று 1990 மே மாதம் தான் திரும்பி வந்தேன். நான் வெளிநாட்டுக்குப் போகவில்லை. ஏனென்றால் எனக்கு இருக்கக்கூடிய தார்மீகப் பொறுப்பு என்ற வகையில் தான் நான் தொடர்ந்தும் இந்த



அரசியலில் இருக்கிறேன்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் பிறகு தென்னிலங்கைத் தலைமைகள், தென்னிலங்கை அரசியல்வாதிகளை நான் குறைகூறவில்லை. என்னுடைய அனுபவத்தில் தமிழ்த் தரப்பின் பிரதிநிதிகள், தமிழ்த் தரப்பின் அரசியல்வாதிகள் தான் இந்தப் பிரச்சினைகளை சரியாகக் கையாளவில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு ஊடாக ஏற்படுத்தப்பட்ட 13வது திருத்தச் சட்டம் தான் எங்களது அரசியல் தீர்வுக்கான சிறந்த ஆரம்பமாக இருக்க முடியும், முடிவல்ல என்பதைத் தான் நான் நீண்டகாலமாக கூறிவந்தேன். உண்மையாக அதனை அன்று ஏற்றுக்கொண்டிருந்தால் இந்த அழிவுகள், துன்பங்கள், துயரங்கள் வந்திருக்காது என்பதுதான் என்னுடைய ஆதங்கம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987ஆம் ஆண்டு கைச்சாத்திட்டபோது புலித் தலைமை உரிமைகோரியது தங்களில் 681 பேர் திலீபனையும் சேர்த்து 682பேர் ஏனைய இயக்கங்கள், பொது மக்களையும் சேர்த்தால் சுமார் இரண்டாயிரம் பேர் தான் எண்ணிக்கையளவில் இருந்திருப்பார்கள். அந்த நேரத்தில் தான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் எமக்குக் கிடைத்தது. ஆனால் அதனைக் கைவிட்டு அதற்கு மேலாகச் செல்ல ஆயத்தமாகியதால் எந்த அர்த்தமும் இல்லாமல் எவ்வளவோ அழிவுகள், துன்பங்களை சந்தித்தோம் என்பதுதான் எனது ஆதங்கம்.

**கேள்வி : ஆனால் நீங்கள் அனைவரும் ஆயுதக்கட்சிகளாக ஒன்றாகத்தானே பயணித்தீர்கள், விடுதலைப்புலிகள் இயக்கத்தை மாத்திரம் எவ்வாறு நீங்கள் குற்றம்சாட்டுகிறீர்கள்?**

**பதில் :** நான் இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தின் பின்னர் தான் கூறுகின்றேன். நாங்கள் அனைவரும் ஆயுதப்போராட்டத்தின் மூலமாகத் தான் அரசியலுக்குள் வந்தவர்கள். அன்று ஒரு நியாயமான தேவை இருப்பதாக எண்ணித்தான் வந்தோம். ஆனால் அப்படி வரும்போது இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டது. நாங்கள் அதனை ஏற்றுக்கொண்டதற்குக் காரணம் ஒன்று சகோதரப் படுகொலைகள், அதாவது இயக்கங்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தீர்த்துக்கொண்ட முறைமை அல்லது இயக்கத்துக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தீர்த்துக்கொண்ட முறைமை. படுகொலைகள், வன்முறைகளால் எங்களது போராட்டம் பலவீனப்பட்டு திசைதிரும்பியது. அதேநேரத்தில் சர்வதேச மட்டத்தில் ஏற்பட்ட மாற்றம். அந்தவகையில் நாங்கள் நினைத்தது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து முன்னேறலாம் என்று.

1978 ஆம் ஆண்டு நான் பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு பயிற்சிக்குப் போனேன். இது நான் அடிக்கடிக் கூறுவது தான். இந்தப் பயிற்சியின் மூலமாக சகோதரத்துவ உணர்வையும், ஆயுதப் பயிற்சி, எங்களது பிரச்சினைகளை சர்வதேச மயப்படுத்துவது தான் நோக்கமாக இருந்தது. அங்கு நான் பயிற்சி பெற்ற காலத்தில் எனது மனதில் ஏற்பட்ட விடயம் என்னவெனில், பலஸ்தீன விடுதலை இயக்கம் பயணிக்கின்ற முறையானது அழிவுகளையும், துன்ப துயரங்களையும் தான் கொடுக்குமேயொழிய வெற்றியளிக்கப்போவதில்லை என்பது. பின்னர் 1984 ஆம் ஆண்டு இரண்டாம் தடவையும் நான் சிலரைப் பயிற்சிக்காக அங்கு அழைத்துச்சென்றேன். நான் சென்றது பயிற்சி பெறவும், சர்வதேச உறவுகளைப் பலப்படுத்துவதற்காகவும் தான். நான் அன்று நினைத்து கூறியது இன்று நீங்களே பார்த்தால் தெரியும். என்ன நடக்கிறது என்பது. தேவையற்ற அழிவுகள் தான். நாங்கள் இன்று அந்த பழைய வீடியோ மற்றும் படங்களைப் பார்க்கின்றபோது வேதனையாகவிருக்கின்றது.

நாங்கள் இஸ்ரேலையோ, தென்னிலங்கை அரசியல்வாதிகளையோ திட்டுவதை விட எங்களை எந்த அளவிற்கு இதற்குள் பொறுத்திக்கொள்ளலாம். கௌரவமாக பொறுத்திக்கொள்ளலாம் என்பதைத்தான் பார்க்கவேண்டும். அதில் நாங்கள் தவறு செய்துவிட்டோம். நாங்கள் அனைவரும் போராட்டத்தில் ஈடுபட்டோம். இலங்கை - இந்திய ஒப்பந்தம் கிடைத்தது. பிரபாகரன் உள்ளடங்கலாக அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டனர். பின்னர் வழமைபோல பிரபாகரன் அதிலிருந்து வெளியில் வந்துவிட்டார். ஆனால் அனைத்தையும் கூட்டிக்கழித்துப் பார்த்தால் இன்று என்ன நடந்தது?

**தொடரும்...**

**நேர்காணல் : மறவன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தமிழ்க் கட்சிகள் ஒருமித்துச் செயற்பட பேச்சுக்களை நடாத்தவேண்டும்

இன்றைய தமிழர் அரசியல் சூழலில் ஒற்றுமையாக பயணித்த தமிழ்க் கட்சிகள் அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற ஆலமரத்தின் கீழ் தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்த தமிழ்க் கட்சிகள் இன்று வடக்கு கிழக்கில் பிரிந்து தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனஎன்பதுஅனைவருக்கும் தெரியும். தமிழ் மக்களுக்கான பொதுவான பிரச்சினைகளுக்கானத் தீர்வு விடயம் என்று வருகின்றபோது சில தரப்பினர் பேச்சுவார்த்தைக்கு வந்து இணக்கப்பாட்டுக்கு வருவதும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதும் பின்னர் காணாமல் போவதும் இன்று நேற்று நடப்பதல்ல. எனினும் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்த கட்சிகள் ஜனநாயகப் போராளிகள் கட்சியை விட ஏனையவை DTNA என்கிற ஒரு கூட்டணியை உருவாக்கியுள்ளன. தமிழரசுக் கட்சி மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்றன தொடர்ந்தும் தனித்து இயங்குகின்றன. இன்னும் சில இதற்குள் அடக்கம்.

இந்தச் சூழல் இனிவரும் காலங்களிலும் தொடரத்தான் போகின்றதா? என்கிற பல கேள்விகள் தமிழ் மக்கள் மத்தியிலும், தமிழ் ஊடகங்கள் மத்தியிலும் இருக்கத்தான் செய்கின்றது. பிரிந்து நிற்கக்கூடிய கட்சிகளும் ஏற்கனவே DTNAவாக இணைந்துள்ள கட்சிகளும் மிக விரைவில் பழைய விடயங்களையே திருப்பித்திருப்பி பேசிக்கொண்டு காலத்தை வீணடிப்பதைவிட்டுவிட்டு தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடும் நீங்கள் அனைவரும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, கட்சிகளை தனித்தனியாக வைத்திருந்தாலும், இணைந்து செயற்பட தயாராகவேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

அவர்கள் தான் வரவேண்டும், நாங்கள் போகமாட்டோம் என்கிற சிறுபிள்ளைத்தனமாக பேச்சுக்களை பேசிக்கொண்டிருக்காமல், புரிந்துணர்வுடன் விட்டுக்கொடுத்து பயணிக்க தமிழ்க் கட்சிகளாகிய நீங்கள் இனியாவது தயாராகவேண்டும். அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தவேண்டும், பேரம்பேசல்களைச் செய்யவேண்டும், அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும், சர்வதேச மட்டத்தில் செயற்படவேண்டும் எனில் பிரிந்துநிற்கின்ற கட்சிகள் ஒருமித்து செயற்பட முன்வரவேண்டும்.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் அரசுகள் காலங்காலமாக தமிழ்ப் பிரதிநிதிகளையும், தமிழ் மக்களையும் ஏமாற்றி வருவதே வரலாறு. தமிழ்ப் பிரதிநிதிகளில் பலரை தம்பக்கம் உள்வாங்கிக்கொண்டு தமிழ் மக்களையும் தமிழ் அரசியற் கட்சிகளையும் பிரித்தாளும் தந்திரோபாயங்களை செய்து வருகின்றனர். அண்மையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கும் போட்டி, பின்னர் தேசிய மகாநாட்டிற்கும் தடையுத்தரவு நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கட்சியின் செயலாளரைத் தெரிவுசெய்வதில் இழுபறி நிலை. இவ்விடயம் தமிழினத்தின் எதிர்கால அரசியல் இருப்பிற்கு ஆபத்தானதாகவே அமையும். அத்துடன் உட்கட்சி முரண்பாடுகளால் அரச கட்சிகள், அரச கைக்கூலிகள் வடகிழக்கில் தமிழ் மக்களின் வாக்குகளை சூறையாட, தமிழ் அரசியல் கட்சிகளே காரணமாக இருக்கக்கூடிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதை நினைவிற்கொண்டு, செயற்பட முன்வாருங்கள் என்பதையே நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம்.



31

## பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

*பிறந்து வளர்ந்த மண் - யூஜீனுக்கும் சதீஸ்சுக்கும் இடங்கள் எல்லாம் அத்துப்படி. அவர்களின் வழிநடத்தலின் கீழ் சாத் தனது குட்டி சுற்றுலாப் பயணத்தை ஆரம்பித்தான். திருக்கோணமலையின் கடற் கரையில் நின்று அண்ணார்ந்து பார்த்தால், கோணேஸ்வர ஆலயத்தின் கோபுரமும் எழில் கொஞ்சும் சுனைக் காட்சியும் கண்களைக் கவர்ந்து இழுக்கும். மூவரும் தங்களுடைய சுற்றுலாவை பொடி நடையாகவே ஆரம்பித்து, மெது மெதுவாக இயற்கை கன்னியை இரசித்தவாறு ஆலயத்தின் முன் வாயிலுக்கு வந்து விட்டனர்.*

**"கற்பூரம் வாங்குங்கே. மூன்று கட்டி பத்து ரூபாய். தேங்காய் வாங்குங்கோ. ஒரு தேங்காய் இருபது ரூபாய். கற்பூரம் கொளுத்தி தேங்காய் தேங்காய் உடையுங்கோ. கட்டாயம் கோணேச்சர இறைவன் - இறைவி அருள் பாலிப்பார்கள். இந்தாங்கே நம்பி வாங்கி கொளுத்துங்கோ. உடையுங்கோ."** - *எழுபது வயது மதிக்கத்தக்க ஒரு பாட்டி இடக்கையில் ஒரு தேங்காயையும் வலக்கையில் மூன்று கற்பூரக் கட்டிகளையும் வைத்துக்கொண்டு கரங்களை நீட்டி நீட்டி கூவினாள்.*

*ஆலயத்தின் முன் வாயிலின் முன் பக்கத்தில் மிக உயரமான சவுக்கு மரத்தில் அமைக்கப்பட்ட பரணில் ஒரு சீருடையான் ஆலயத்திற்கு வரும் அனைவரையும் ஐயக்கண் கொண்டு அவதானித்தான். கீழே வரும் மக்கள் சாதாரணமாகப் பார்த்தால், அந்த சீருடையன் கண்களுக்குப் புலப்பட மாட்டான். அந்த அளவுக்கு இயற்கை கன்னியின் அலங்காரம்.*

*கோயில் வளாகத்தினுள் வரும் ஆண்களை மேல் சட்டைகளைக் கழட்டுமாறு முன்பக்க மதிலில் எழுதப்பட்டு இருந்தது. இருந்தும் முழு அங்கிகளுடன் ஆலயத்தைச் சுற்றி பரணில் சீருடையினர். இது கோயில் பரிபாலன சபைக்குத் தெரியாது போல. சட்டங்கள் எல்லாம் அப்பாவி மக்களுக்குத்தான்.*

*மூவரும் மேல் அங்கிகளைக் கழட்டி இடுப்புகளில் கட்டிய வண்ணம் ஆலயத்திற்குள் பிரவேசித்தபோது, தற்காலிகமாக அமைக்கப்பட்ட சோதனைச் சாவடி கூடாரத்தினுள் ஒவ்வொருவராக அமைதியாக புகுந்தனர். அங்கு பெண் சீருடையாள், செல்பவர்களுடைய தேசிய அடையாள அட்டையை வாங்கி,* **"போகும் போது வாங்க. ஐ.சி.க்கு"** *- கூறி ஒரு பெட்டியினுள் போட்டாள். அருகில் ஒரு சீருடையான் பச்சை நிறத்தில்* **'கீக்.கீக்.. கீக்...'** *- சமிக்ஞையுடன் ஒரு மின் குமிழ் எரிய, செல்பவர்கள் மீது பாதார கேசம் முதல் கேசார பாதம் வரை பிடித்தான். சாத்தின் உடல் மீது அந்த சோதனை நடந்தபோது,* **'கீக்.கீக்..கீக்...'** *- சிவப்பு சமிக்ஞை எரிந்ததும் அருகில் நின்ற யூஜீனுக்கும் சதீஸ்சுக்கும் ஒரு கணம் உடலில் மின்சாரம் பாய்ந்து மனத்திற்குள் பயம் உண்டாகிற்று. அந்த சீருடையன்,* **"மல்லி. உருலோசைக் கழட்டுங்க."** *- என்றதும் சாத்தும் கழற்றினான்" மீண்டும் பச்சை சமிக்ஞை மணிக்கூடு சீருடையாளின் பெட்டிக்குள் போகின்றது. இருவருக்கும் பயம் தெளிவடைய சாத்தையும் அழைத்துக்கொண்டு ஆலயத்தின் உட்பகுதிக்குள் நுழைந்தார்கள்.*

*சதீஸ் கடவுள் மீது பற்று கொண்டவன் - அவன் வாங்கிய தேங்காய், கற்பூரத்துடன் ஆலய மண்டபத்திற்குள் சென்றான். சாத்தும் யூஜீனும் இராவணன் வெட்டு பார்க்கச் சென்றனர். பாறைகளின் மேல் நின்றவாறு இராவணன் வெட்டைப் பார்க்கும் போது, மிகவும் ஆழத்தில் நீர் ஆடுவது மட்டுமே தெரிந்தது. அதைப் பார்த்துச் சற்று திகைத்துப்போன சாத், தனக்கு அருகில் நின்ற யூஜீனிடம் உரையாடலை மெதுவாக ஆரம்பித்தான்.*

**"யூஜீன் அண்ணா. இந்த இராவணன் வெட்டு போகப் போக சின்னனா தெரியுது"**
**"இல்லை. அது ஒரே அளவில்தான் போகுது"**
**"அப்ப. ஏன் அடியில் சின்னனா தெரியுது?"**
**"ஆழம் கூட கூட அப்படித்தான்"**
**"இதுக்கு. பல புராண - இதிகாச கதைகள் உண்டு. சமயத்திலும் தமிழ் இலக்கியத்திலும் படிச்சிருக்கன். இப்பதான் இதை முதல் தடவையாக பாத்திருக்கன்"**
**"சாத். இந்த இந்து ஆலயம் இந்து மதத்தின் தொன்மையைப் பறைசாற்றுகின்றது. இப்ப ஈழத்தில் இந்துக்கள் - வைவர்கள். கிறிஸ்தவர்கள். இஸ்லாமியர்கள். பௌத்தர்களுடைய பொதுவான வழிப்பாட்டுத்தலமாக மாறிவிட்டது."**
**"ஏன் ஆலயத்திற்கு இராணுவ பாதுகாப்பு?"**
**"ஒருக்கா வெடிகுண்ட வைச்சு. வழிபட வந்த. பக்தர்களும் ஆலயத்தைப் பார்க்க வந்த. வெளியூர் - உள்ளூர் சுற்றுலாப் பிரயாணிகளும் நூற்றுக்கணக்கில் செத்தில்லையா போனாங்க?"**
**"சுற்றுலாப் பயணிஞம் இஞ்ச வாறாங்களா?"**
**"அவங்கள்தான். அதிகம். சாத். நீங்கள் கூட இப்ப என்னத்துக்கு வந்திங்க. சும்மா இடம் பாக்கத்தானே?"**
**"நீங்கள் சொல்லுறதும் சரிதான். இப்ப வர வர ஆலய வழிபாடு செய்வது எல்லாம் வேலை மினக்கேடு மாதிரி"**
**"வாங்க. ஆலயத்தைச் சுற்றி உள்ள உள் வீதியையும் வெளி வீதியையும் பார்த்திட்டு வருவம். சதீஸ்சும் கும்மிட்டு முடிச்சிருப்பான்."**



**"என்ன யூஜீன் அண்ணா? பௌத்த துறவிகள் உடல் மேல மஞ்சள் துணியால். சுற்றி கட்டியும் கிறிஸ்தவ பாதர்மார்கள் உடல் முழுவதும் வெள்ளாடை அணிந்தும் இஸ்லாமிய மௌலவிகள் கலர் கலரா உடலை முழுமையாக மறைக்கும் ஆடையை அணிந்துகொண்டு வலம் வாறாங்க. அவங்க மேல் அங்கிகள் கழட்டத் தேவையில்லையா?"**
**"இதெல்லாம் ஒரு வகையான மதத் திணிப்பும் மதங்களின் பண்பாட்டை இழிவுப்படுத்தும் செயலும். தாங்களின் மதத்தை விளப்பரப்படுத்தி. பிழைப்பு நடத்திற சில கூட்டங்கள் இப்படித்தான். இது எல்லாம் எங்களுக்கு வேண்டாத சோலி சுரட்டு"**
**"எங்கட மதத்தில் அப்படி மத மாற்றமும் பரப்பும் வேளையும் இல்லையே."**
**"இல்லைதான். நல்ல விடயந்தான். ஆனா அடிமைத்தனம். மூட நம்பிக்கை நிறைந்ததாச்சே?"**
**"அப்படியில்லை. எல்லா மதமும் மனிதனுக்குத் தேவையான கோட்பாட்டைத்தான் சொல்லுது மனிதந்தான். தனக்குத் தேவையான வெறிகளை ஏத்திக்கொண்டு. சமூக பணிகள் செய்யவேண்டிய ஆலயங்களை அடிமைப்படுத்தலின் இருப்பிடமாகவும் வியாபாரத்தின் - சுரண்டலின் - சாதனமாகப் பயன்படுத்தத் தொடங்கி விட்டான்."**

*கோபுரங்களிலும் கோயில் சுவர்களிலும் கோயில் வாயில்களிலும் கற்கலாலும் 'சிமெண்ட்' ஆலும், உழைப்பாளிகள் பலரின் உழைப்பைச் சுண்டிய கற்சிலைகளை, பக்தர்கள் பலர் நமஸ்காரம் புரிந்தனர். அவர்களில் பலர் தாய் தந்தையரைப் பராமரிக்காமல் முதியோர் வீடுகளில் விட்டவர்களும் பல பாவங்களைச் சுமந்தவர்களும். சமூகத்தில் கல்விக்காகவும் உணவுக்காகவும் பலர் ஏங்கித்தவிக்க, மூலஸ்தானத்தின் அருகில் போலி பக்தர்களின் அன்பளிப்பிலான, கோடிக்கணக்கு பெறுமதியான தங்க சிலைகளும் தங்க ஆபரணங்களும் கண்களைப் பறிக்கும்.*

*சதீஸ் ஆலய வழிபாட்டை முடித்துக்கொண்டு, சுமாரான சன நடமாட்டத்திற்குள் தன்னுடன் வந்தவர்களைத் தேடுகின்றான். கூப்பிடு தூரத்தில் அமைந்த வெளி வீதியில் இருவரும் உரையாடிக் கொண்டிருப்பது அவனது கண்களுக்குப்பட்டது.*

**"யூஜீன் அண்ணா யூஜீன் அண்ணா"** *சதீஸ் கூப்பிட்டான்.*
**"சதீஸ் என்னடா?"** *- திரும்பினான்.*

*அண்ணாவும் தம்பியும் அவர்களை மறந்து ஏதோ கதைத்துக் கொண்டார்கள். அவர்களின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு, சாத் ஆயுத முனையில் கடத்தப்பட்டான். சகோதரர்கள் இருவரும் சாத்தைக் காணவில்லை தேடி அலைந்தார்கள். அவர்கள் கூட்டிக்கொண்டு வந்து, நல்ல பையனை எங்கே தொலைத்து விட்டோம் - கவலைப்பட்டார்கள். சுற்றும் முற்றும் தேடினார்கள் அவனை எங்கும் காணவில்லை. இருவருக்கும் இரண்டு வகையான பீதிகள் மனத்தில் குடிகொண்டன.*

**"அண்ணா நீதான் சும்மா பஸ்ஸில் போனவனை வேலியில் கிடந்த பாம்பைச் சட்டைப் பையில் எடுத்துப்போட்ட மாதிரி பாவம் - கூட்டிக்கொண்டு வந்தாய். வீட்ட பேச்சு வாங்கப்போறாய். அண்டைக்குத்தான் பக்கத்து வீட்டில் ஒரு பொடியனை நிப்பாட்டி வைத்ததுக்கு ஆமி வந்து குடும்பத்தையே கொண்டு போச்சி. அப்பவும் எனக்கு பஸ்ஸில் வைத்தே சந்தேகம்."**
**"ஒருத்தரைப் பற்றி அப்படி சும்மா வாய்க்கு வந்த மாதிரி கதைக்காத அவன் அப்படி இருக்கமாட்டான்"**

# கூட்டமைப்பைப் பிளவுபடுத்திய சுமந்திரனே தமிழரசுக் கட்சியையும் பிளவுபடுத்தினார்



தமிழரசுக் கட்சி எங்கே செல்கின்றது, தமிழ் மக்களை எங்கே கொண்டு செல்லப் போகின்றது என்கிற விடயங்களை இன்று முக்கியமாகப் பார்க்கவேண்டியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளால் 22 பேர் பாராளுமன்றத்திற்காக தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டபோது தமிழ் மக்கள் அனைவரும் விரும்பி வாக்களித்திருந்தபோதிலும், இந்தப் பொறுப்பினை மாவை சேனாதிராஜா அவர்களிடம் வழங்கியமைக்கான காரணம் அவர் நீண்டகாலமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பேசிவரக்கூடிய ஒருவராகவும் தமிழ் மக்களுக்காக போராட்டங்களில் ஈடுபட்டு வந்தவர் என்கிற அடிப்படையிலும் தலைவர் பிரபாகரன் அவர்களால் நற்சான்றிதழ் வழங்கப்பட்டு தமிழரசுக் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் தலைவராக இருந்த காலப்பகுதியில் தான் 22 பேர் பாராளுமன்றம் நோக்கிச் சென்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கின்ற திரு.சம்பந்தன் அவர்களை சுட்டுக்கொலை செய்யுமாறு கூறப்பட்டபோதிலும் அவருக்காகப் பேசியவர் மாவை சேனாதிராஜா அவர்கள் தான். இதனால் தான் விடுதலைப்புலிகள் அவரைச் சுடவில்லை என்கிற வரலாறும் இருக்கிறது என்பதை அன்று விடுதலைப்புலிகளின் கட்டளைத் தளபதியாக இருந்த கருணா அம்மான் அவர்கள் பேசியிருந்தார். ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர்களை சுட்டுக்கொலை செய்யுங்கள் என்கிற பணிப்பு வந்தபோதிலும் எதிர்த்துக் குரல் கொடுத்தவர் தான் மாவை சேனாதிராஜா.

சரி, தவறு என்பதற்கப்பால் அரசாங்கம் திட்டமிட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பிளவுபடுத்துவதற்கு தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் துணைபோயிருக்கின்றார்கள். அதாவது நேரடியாகக் கூறப்போனால் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணியினர் துணைபோயிருப்பது என்பது கவலைக்குரிய விடயம். பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் வடமாகாண சபையின் முதலமைச்சராக இருந்தபோது வன்முறையாளர்களோடு பயணிக்க தான் தயாராக இல்லை என்று கூறி ஆயுதப் போராட்டத்தின் ஊடாக வந்தவர்களை அவர் ஓரங்கட்டினார். ஆசனமும் வழங்காமல் உங்கள் மீது எங்களுக்கு சந்தேகம் இருப்பதாகக் கூறி, வன்னி இன் ஹோட்டலில் வைத்து அவர்களைத் திருப்பியனுப்பிய சம்பவமும் நடந்தது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதற்கு முன்னிற்பவர்களில் இன்றைய ஜனாதிபதியாக இருக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர். இவர் தமிழீழ விடுதலைப்புலிகளை உடைத்தெறிவதற்காக கருணாவுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் பிளவுகளையும் ஏற்படுத்தியவர். தமிழ் மக்களது ஆயுதப்போராட்டத்தை வடக்கு கிழக்கில் இருந்து அழிக்கவேண்டும் என்பதில் மிகவும் தந்திரமாகச் செயற்பட்டு, சர்வதேச நாடுகளின் உதவிகளைப் பெற்று விடுதலைப் புலிகளையும் இல்லாமல் செய்யவேண்டும் என்பதில் தீவிரமாகச் செயற்பட்ட ஒருவராகவே ரணில் விக்கிரமசிங்க கருதப்படுகிறார்.

இன்றுஜனாதிபதியாகஇருக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்துவதில் களமிறங்கி, கூட்டமைப்பாகவிருந்த ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகளை பிளவுபடுத்திவிட்டார். தற்போது பிரிந்துசென்ற இவர்கள் DTNA என்கிற அமைப்பினை உருவாக்கி தமிழரசுக் கட்சியினரே இணைந்து பயணிக்க விரும்பினால் எம்முடன் வந்து இணைந்து செயற்படுங்கள் என அறைகூவல் விடுக்கின்றனர்.

தொடர்ந்தும் இந்த தாய்க்கட்சியை, பழமையானதொரு கட்சியை, 17வது தலைவரைக் கொண்டிருக்கக்கூடிய கட்சியை, நீண்ட அரசியல் பாரம்பரிய வரலாற்றைக் கொண்டிருக்கக்கூடியதொரு அரசியற் கட்சியான தமிழரசுக் கட்சியை பிளவுபடுத்துவதற்கு அக்கட்சிக்குள்ளேயே இருப்பவர்கள் துணிந்து கூட்டாக செயற்படுகின்றபோது, அவ்வாறானவர்களை கட்சிக்குள் இருந்து அகற்றுவதற்கு இயலாமல் முதுகெலும்பற்ற விதத்தில் ஏனைய உறுப்பினர்களும், தலைமைகளும் இருக்கின்ற விடயத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மையில் வருந்தத்தக்க விடயம்.

பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுமந்திரன் அவர்கள் கட்சியைப் பிளவுபடுத்த தேவையான நடவடிக்கைகளைச் செய்கின்றார், தனது ஆதரவாளர்களைக் கொண்டு கட்சிக்குள் குழப்பங்களை ஏற்படுத்துகின்றார் என்று முன்னாள் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவிடம் ஏனைய உறுப்பினர்கள் கூறியபோதும் கூட அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை. மாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, தமிழரசுக் கட்சியோ பிளவுபடவில்லை, நாங்கள் ஒற்றுமையாகவே பயணிக்கின்றோம் என்கிற அடிப்படையில் எங்களுக்கு நேர்காணலை வழங்கியிருக்கின்றார். பிளவுபட்டு கட்சிகள் வெளியில் சென்றுவிட்ட பின்னரும் தாங்கள் பிளவுபடவில்லை என்று கூறிய தலைவராக மாவை சேனாதிராஜா திகழ்கின்றார்.

சுமந்திரன் என்பவர் போராட்டங்களுக்கு ஊடாக வந்தவர்களுக்கு எதிராக இருப்பவர் தான் என்பது அனைவருக்கும் தெரியும். இவர் குற்றமிழைத்திருந்தால் தமிழரசுக் கட்சியில் உள்ள மூத்த உறுப்பினர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமா? அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த கட்சிகள் தமிழரசுக் கட்சியின் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தாம் வெளியில் சென்றிருக்கின்றன. இன்று தமிழரசுக் கட்சி தனிமரமாகியுள்ளது தான் மிச்சம்.

தூசுபடிந்திருந்த தமிழரசுக் கட்சியை விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற கட்டமைப்புக்குள் கொண்டுவந்தவர். 22 பேரை பாராளுமன்றம் அனுப்பிய வரலாற்றுப் பெருமை விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனையே சாரும். இந்த தமிழ்க் கட்சிகளுக்குள் தொடரும் பிரச்சினைகளைதமிழ்மக்கள்ஏற்றுக்கொள்ள முடியாமல் தான் விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்கள். தமிழ் மக்களுக்கு நீண்டகாலமாக தீர்க்கப்படாத பிரச்சினைகள் பல இருக்கின்ற சூழலில், ஒற்றுமையாக ஒரு குடையின் கீழ் பயணித்து செயற்படுவதை விடுத்து இன்று கட்சிகளுக்குள் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனர். புதிது புதிதாக கட்சிகளை உருவாக்கி வருகின்றனர். விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் உள்நாட்டில் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்க் கட்சிகளின் செயற்பாடுகள் அனைத்தும் தலைகீழாக மாறியுள்ளது என்பதுதான் உண்மை.

தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிளவு என்பது எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சிக்குத் தான் ஆபத்தானதாக மாறியுள்ளது. ஏனைய கட்சிகளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்றன இனிவரும் காலங்களில் தனித்தனியாக தேர்தல்களை முகங்கொடுக்கக் காத்திருக்கின்றன. இதிலும் ஏற்கனவே DTNA என ஒரு அமைப்பும் உருவாக்கம் பெற்றுள்ளது. இவர்கள் இனிவரும் காலங்களில் ஒரு பொதுச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடவும் கூடும். எதிர்காலங்களில் தமிழரசுக் கட்சி தனிமரமாக நின்று மிக சொற்ப ஆசனங்களையே பெறக்கூடிய நிலையும் ஏற்படலாம்.

அரசாங்கத்தின் இராஜதந்திர நகர்வே இது. இதற்குப் பகடைக்காயாக சுமந்திரன் அணியினர் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்று தேசிய மகாநாட்டிற்கான தடையுத்தரவானது சுமந்திரன் ஆதரவு தரப்பினராலேயே வழக்கு பதிவுசெய்யப்பட்டிருக்கலாம் என்றும் அதற்கு சுமந்திரன் அவர்களே சட்டத்தரணியாக வழக்கில் ஆஜராகி வாதாடலாம் என்றும் வெளியில் பேசப்படும். இதனைச் செய்தவர் சுமந்திரன் அவர்கள் தான் என்கிற விடயமும், தமிழரசுக் கட்சியின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவர்கள் வரக்கூடாது என்பதில் சுமந்திரன் அவர்கள் உறுதியாகவிருந்ததாகவும் இன்று ஊடகப் பரப்பில் பேசப்படுகின்றது. மக்கள் மத்தியிலும் பேசுபொருளாக மாறியுள்ளது. சுமந்திரன் அவர்கள் செயலாளராக சரி வரவேண்டும் என்பதில் கட்சியின் மத்திய குழுவிலுள்ள பலர் விரும்புகின்றனர். இவர்கள் சுமந்திரன் அவர்களுக்குத் தான் ஆதரவானவர்களாக இருக்கின்றனர். பொதுக்குழுவினர் தான் எம்.பி சிறீதரனை ஆதரிக்கக்கூடியவர்களாக இருக்கின்றனர். தலைவர் தெரிவில் கூட பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு அதில் குளிர்காய்கின்றவர்களாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் ஊடகவியலாளர் சிவராம் அவர்களின் பணி முக்கியமானது. அவரிடம் தான் கட்சிகளை ஒருங்கமைக்கின்ற பணி வழங்கப்பட்டிருந்தது. அதனை அவர் சரியாகச் செய்தார். இன்றும் கூட பிளவுபட்டிருக்கின்ற கட்சிகளை மீண்டும் ஒற்றுமைக்குள் கொண்டுவந்து 20-22 ஆசனங்களைப் பெற்றுவிட்டால் அது தமிழ் மக்களுக்கான பாரிய வெற்றியாகவே அமையும். அதனைத்தான் நாங்களும் விரும்புகின்றோம்.

தமிழ் மக்களது பிரச்சினைகளை இன்னும் ஆழமாக பாராளுமன்றில் பேசுவதற்கு அது எமக்குப் பலமாக அமையும். எமது பிரதிநிதிகளின் எண்ணிக்கை பாராளுமன்றில் அதிகரிக்கின்றபோது எம்மை நோக்கி பல சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும்வரும். நாம் இந்த நாட்டின் பல விடயங்களைத் தீர்மானிக்கின்ற சக்திகளாக பாராளுமன்றில், வெளியில் திகழ்வோம். ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டாலும் தமிழரசுக் கட்சி சரியான பாதையில் பயணித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தொடர்ந்து தக்கவைப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டு, இன்று கூட்டமைப்பாக இருந்த கட்சிகள் பிளவடைந்துபோயுள்ளன. இன்று தனிமரமாக நிற்கும் தமிழரசுக் கட்சி மேலும் உட்கட்சிக்குள்ளேயே சிறீதரன் அணி, சுமந்திரன் அணி, மாவை அணி, சாணக்கியன் அணி என்று பிளவுபட்டு நிற்பது ஆரோக்கியமான விடயம் அல்ல. சில உண்மைகள் தெரியாத ஊடகங்களுக்கும், முகநூல்களுக்கும், யூடியூப் சனல்களுக்கும் சிறீதரன் அவர்கள் நேர்காணல்களை வழங்குகின்றார். நாமும் அழைத்தபோது அவர் நேர்காணலை புறக்கணித்திருந்தார்.

தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்கிற கோட்பாடுகளுடன் தமிழ் மக்களின் விடிவுக்காக ஒருமித்துச் செயற்படுகின்ற இந்த தமிழரசுக் கட்சி, இன்று அக்கட்சிக்குள் இருக்கும் குழப்பவாதிகளை எதிர்க்க திராணியற்றவர்களாக தொடர்ந்தும் இருப்பது என்பது மிக மோசமான விடயம். சுமந்திரன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றபோதிலும் அவர் ஒரு சட்டத்தரணி. அவர் தனது வாதிடும் திறமையால் எதனையும் செய்துவிடலாம் என்று எண்ணியே, சிறீதரன் அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு முன்னரே அவருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்தவர். அதுவே ஒரு தவறான செயற்பாடாகும். அவர் கடிதம் எழுதுவது எனில் முன்னாள் தலைவருக்கு எழுதியிருக்கலாம். சட்டத்திறமையால் தன்னால் எதனையும் செய்துவிடலாம் என்கிற அவரின் மனநிலையினையே இவ்விடயம் எடுத்துக்காட்டுகின்றது. அன்று திருகோணமலையில் சிறீதரனும், சுமந்திரனும் ஒன்றாகச் செயற்படுவோம் என கைகோர்த்தது எல்லாம் நாடகம். இருவருக்குள்ளும் பல முரண்பாடுகள் இருக்கின்றன.

எது எவ்வாறாகவிருந்தாலும் தமிழரசுக் கட்சியானது கட்சிக்குள் பிரச்சினைகளுக்குக் காரணமானவர்களை அடையாளம் கண்டு அவர்களைக் களையவேண்டும். இவர்களை இனங்காணவேண்டும். இவர்கள் தமிழ் மக்களுக்கான அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்படவேண்டியவர்கள்.

**இரணியன்**

# ஒரு பல்கலைக் கழகமும் ஒரு இசைநிகழ்ச்சியும்

பாடசாலைகளை, பல்கலைக் கழகங்களைக் கட்டுவது உன்னதமானது. புலம்பெயர்ந்துபோன எல்லாத் தமிழர்களும் தாயகத்துக்கு திரும்பி வருவதில்லை. தாயகத்துக்கு திரும்பிவரும் எல்லாருமே தாயகத்தில் முதலீடு செய்வதில்லை. தாயகத்தில் முதலீடு செய்பவர்களிலும் மிகச்சிலர்தான் கல்வித்துறையில் முதலீடு செய்கிறார்கள். ஆளில்லா ஊரில் ஆலயங்களைக் கட்டுவதை விடவும் கல்விச்சாலைகளை கட்டுவது மகத்தானது. அப்படி ஒரு முதலீடுதான் கந்தர்மடம் சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் நோர்தேன் யுனி என்று அழைக்கப்படும் தனியார் பல்கலைக்கழகம்.





போட்டிக் கல்வி வியாபாரமாக மாறிய ஒரு கல்விச்சூழலில், ஒரு முதலாளி கல்வியில் முதலீட்டைச் செய்யும்பொழுது அங்கேயும் வியாபார இலக்குகள் இருக்கும். ஆனால் தனது முதலீட்டை விளம்பரப்படுத்துவதற்காக சினிமாத்துறைப் பிரபல்யங்களை கொண்டு வரும்போதுதான் சர்ச்சை எழுகிறது.

கடந்த இரு நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவ மிஷனரிகளும் இந்து மத மறுமலர்ச்சியாளர்களும் போட்டிக்குப் பள்ளிக்கூடம் கட்டிய ஒரு பிரதேசம்தான் யாழ்ப்பாணம். நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது அவ்வாறு போட்டிக்குப் பள்ளிக்கூடம் கட்டிய ஒரு போக்கின் தேறிய விளைவு.

அமெரிக்காவில் தமது சுகபோகங்களைத் துறந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து பள்ளிக்கூடங்களைக் கட்டிய மிஷன் தொண்டர்கள் ஊரூராக பிடியரிசி சேர்த்து இந்துக் கல்லூரிகளைக் கட்டிய இந்து மறுமலர்ச்சியாளர்கள் என்ற மகத்தான முன்னுதாரணங்கள் ஈழத் தமிழர்களுக்கு உண்டு.

இம்மாதம் ஆறாந் திகதி உடுவில் மகளிர் கல்லூரியில், அக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு 200ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கொண்டாட்டங்கள் தொடக்கின. சரியாக 200 ஆண்டுகளுக்கு முன் திருமதி.ஹரியற் வின்சிலோ என்று அழைக்கப்படும் அமெரிக்கப் பெண், தனது 28 ஆவது வயதில் உடுவில் மகளிர் கல்லூரியைத் தொடங்கினார். தென்னாசியாவில் விடுதி வசதியோடு கூடிய முதலாவது பெண்கள் பள்ளி அது. யாழ்ப்பாணத்தில் ஹரியற் அம்மையார் தங்கியிருந்த காலத்தில் அவருடைய ஐந்து பிள்ளைகள் தொற்று நோய்க்கு இரையானார்கள். அமெரிக்காவுக்கு படிப்புக்காக அனுப்பப்பட்ட அவருடைய ஆண் பிள்ளை கடல் பயணத்தில் இறந்து போனார். தொடர்ச்சியான தனிப்பட்ட இழப்புகளால் நொறுங்கிப்போன ஹரியற் தன்னுடைய 37ஆவது வயதில், இளவயதில் இறந்து போனார். அவரோடு சேர்ந்து பணிபுரிய வந்த அவருடைய இரண்டு சகோதரிகள் அவருக்குப் பின் இறந்து போனார்கள். தன் மூன்று சகோதரிகளோடு சேர்ந்து பணிபுரிவதற்கென்று அமெரிக்காவிலிருந்து வந்த மற்றொரு சகோதரி யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கிய பின்னர்தான் தன்னுடைய ஏனைய மூன்று சகோதரிகளும் உயிரோடு இல்லை என்பதை அறிந்துகொண்டார்.

யாழ்ப்பாணத்தின் கல்வியை கட்டியெழுப்புவதற்காக எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த வெள்ளைக்காரர்கள் இங்கு வந்து சந்நியாசிகள்போல வாழ்ந்து, தொண்டு புரிந்திருக்கிறார்கள். அவர்கள் மதம் மாற்றினார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அவர்களுடைய செயற்பாடுகளுக்கு எதிராக இந்து மறுமலர்ச்சியாளர்களும் இந்து அறக்கட்டளைகளும் பள்ளிக்கூடங்களைக் கட்டியெழுப்பினார்கள்.

மிஷன் பள்ளிக்கூடங்களை எதிர்கொண்டு ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்தில் சுதேசிகளின் பள்ளிக்கூடங்களைக் கட்டினார். அவ்வாறு பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு அவர் பிடியரிசித் திட்டம் என்ற ஒரு சமூகப் பங்களிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கிராமங்கள் தோறும் பிடியரசி சேகரிக்கப்பட்டு, அந்த நிதியில் யாழ்.இந்துக் கல்லூரியும் உட்பட பல்வேறு சுதேச பள்ளிக்கூடங்களை இந்து மறுமலர்ச்சியாளர்களும் இந்து அறக்கட்டளைகளும் கட்டினர்.

உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் மருதனார் மடத்தில் ராமநாதனின் கல்லூரி கட்டப்பட்டது. அப்பள்ளிக்கூடத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகிய திருமதி லீலா ராமநாதன் ஒரு ஒஸ்ரேலியப் பெண். அவருடைய சேவையை வியந்து போற்றுபவர்கள் அவருடைய வெண்ணிறப் பாதங்களில் அந்த ஊரின் செம்பாட்டுச் சாயம் நிரந்தரமாக ஒட்டிக் கொண்டிருக்கும் என்று கூறுவார்கள்.

இவ்வாறு எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த வெள்ளைக்காரப் பெண்களும் ஆண்களும், உள்ளூரில் சைவ சமய மறுமலர்ச்சியாளர்களும் கல்விச்சாலைகளைக் கட்டியெழுப்பிய போது அவர்கள் அதை அதிகபட்சம் தொண்டாகவே செய்தார்கள். கல்விப் பணி என்பது உன்னதமான ஒரு தொண்டாகக் கருதப்பட்டு, போற்றப்பட்ட காலகட்டம் அது.

இப்படிப்பட்ட கல்விச்சாலைகளைக் கட்டும் ஒரு பாரம்பரியத்தின் பின்னணியில் வைத்து நோர்தென் யூனியைப் பார்க்க வேண்டும். அந்த பல்கலைக்கழகம் கட்டப்பட்டிருக்கும் கந்தர்மடம் சந்தியில் இருந்து அரசடிச் சந்தியை நோக்கி வரும் கந்தர் மடம் வீதியில், முன்பு ஒரு சைவப் பிரகாசா வித்தியாசாலை இருந்தது. அங்கே மாணவர்களின் வரவு குறைந்தபடியால் அப்பள்ளிக்கூடம் மூடப்பட்டு பின்னர் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் இப்பொழுது ஏதோ ஒரு அரச கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அச்சிறிய பள்ளிக்கூடத்துக்கு ஈழப்போரில் ஒரு முக்கியத்துவம் உண்டு. 1983ஆம் ஆண்டு தொடக்கத்தில், உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்தபொழுது சைவப்பிரகாச வித்தியாசாலை ஒரு வாக்களிப்புச் சாவடியாக இருந்தது. அத்தேர்தலைப் பகிஷ்கரித்த விடுதலைப் புலிகள் இயக்கம் அந்தச் சாவடியில் காவலுக்கு நின்ற படையினர் மீது தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார். இப்பொழுது மாணவர்கள் இல்லை என்பதால் அப்பள்ளிக்கூடம் மூடப்பட்டு விட்டது. அது அமைந்திருக்கும் வீதி பலாலி வீதியில் வந்து ஏறும் சந்தியில் நோர்தேன் யூனி கட்டப்பட்டிருக்கிறது.

கனடாவில் வசிக்கும் தமிழ் முதலீட்டாளர் அதைக் கட்டியிருக்கிறார். தனது தாயகத்தில் அவர் முதலீடு செய்ய விரும்புகிறார். குறிப்பாக அதனைக் கல்வித் துறையில்முதலீடுசெய்ய விரும்புகிறார். தமிழ் மக்களுக்கு தனியார் பல்கலைக்கழகங்கள் வேண்டும். தமிழ் மக்கள் தங்களுக்கு வேண்டிய துறைகளை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தில் தங்கியிராத அதுபோன்ற பல்கலைக்கழகங்கள் வேண்டும். அந்த அடிப்படையில் அந்த முதலீட்டை வரவேற்க வேண்டும்.

அந்த முதலீட்டாளரின் மனைவி இந்தியாவின் சினிமாப் பிரபல்யங்களில் ஒருவரான ரம்பா. அதனால் அப்பல்கலைக்கழகத்தை விளம்பரப்படுத்த முயன்ற முதலீட்டாளர் தன்னுடைய மனைவியின் துறைசார்ந்து சிந்தித்துவிட்டார். தன் மனைவியின் துறைசார்ந்த பிரபல்யங்களை கொண்டு வந்து பெருமெடுப்பில் ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்துவதன் மூலம் தனது பல்கலைக்கழகத்திற்குப் பொருத்தமான விளம்பரம் கிடைக்கும் என்று அவர் கருதியிருக்கலாம்.

தமிழ் வெகுசனப் பண்பாட்டில் சினிமாவின் தாக்கம் வலியது. பெருந்தமிழ் பரப்பில், குறிப்பாக தமிழகத்தில், அரசியல் எனப்படுவது ஏதோ ஒரு விகிதமளவுக்கு சினிமாவின் நீட்சியும் அகட்சியும்தான். ஊடகமாகட்டும் பொழுதுபோக்கு ஆகட்டும், எல்லாவற்றிலும் சினிமாவின் தாக்கம் உண்டு. கேபிள் தொலைக்காட்சி எனப்படுவது சுந்தர ராமசாமி கூறுவதுபோல வீட்டுக்கு வந்த திரைப்படம்தான். அது வீட்டில் வரவேற்பறையில் எப்பொழுதும் இருப்பது. எனவே தமிழ்ப் பொது உளவியலின் மீது தமிழ்ச் சினிமாவின் செல்வாக்குப் பெரியது.

தென்னிந்திய வணிக சினிமாவானது மேலோட்டமானது. தமிழ்ப் பொதுப் புத்தியைச் சுரண்டுவது அல்லது அவமதிப்பது. பெண்ணுடலைப் போகப்பொருளாகப் பார்ப்பது. தமிழில் ஜனரஞ்சகமானவற்றுள் பெரும்பாலானவை மேலோட்டமானவை. ஆழமற்றவை. அறிவுக்கு விரோதமானவை. இந்த அடிப்படையில் பார்த்தால் அறிவைக் கட்டியெழுப்பும் ஓர் உயர்கல்வி நிறுவனத்துக்கு ஜனரஞ்சகமான விளம்பர உத்தி ஒன்றைத் தெரிந்தெடுத்த விடயத்தில் அந்த முதலீட்டாளர் தவறிழைத்து விட்டார்.

நிகழ்வில் கூடிய கூட்டத்தைக் கட்டுப்படுத்த அவர் மேடையில் பேசுகிறார். தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் புலம்பெயர்ந்து போன நாட்டில் இருந்து வந்திருப்பதாக கூறுகிறார். ஆனால் கூட்டம் அவருக்கு அடங்கவில்லை. அவருடைய மனைவி ரம்பா பேசுகிறார். கூட்டம் அடங்கவில்லை. போலீஸ் அதிகாரி பேசுகிறார் கூட்டம் அடங்கவில்லை. அப்படி ஒரு கூட்டத்தை எதிர்பார்த்து அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யப்படாததன் விளைவு அது. புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி அதிகாரத்துக்குள்ள வரையறைகளை உணர்த்திய ஒரு நிகழ்வும் அது.

ஆனால் அந்தக் குழப்பம் புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளுக்கு விரோதமானது அல்ல. முதலீட்டை விளம்பரப்படுத்த எடுத்துக்கொண்ட வியாபார உத்தியின் விளைவு அது. மேலும், ஹரிஹரனின் இசையை பார்வையாளர்கள் அவமதித்ததாகவும் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ஒரு தமிழ் முதலீட்டாளர் தமிழ் பொதுப்புத்தியை கையாள்வதில் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் உண்டு என்பதனை உணர்த்திய ஒரு குழப்பம் அது. தாயகத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகள் தொடர்பாக முதலீட்டாளர்களும் தாயகத்தில் உள்ள அரசியல் சமூகமும் இணைந்து ஒன்றிணைந்த ஒரு வேலைத் திட்டத்துக்குப் போகவேண்டியிருப்பதை உணர்த்திய ஒரு நிகழ்வு அது.

தாயகத்துக்கு முதலீடுகள் அவசியம். தாயகத்தில் தொழில் வாய்ப்புகள் இல்லை அல்லது மகிழ்ச்சியான ஒரு வாழ்க்கை இல்லை அல்லது முன்னேறுவது கடினம் என்று கருதும் ஒரு தொகுதி மக்கள் தாயகத்தைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் இது. "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்று பாடிய ஒரு மக்கள் கூட்டம், அந்த மண்ணை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறது. எனவே தாயகத்தைத் தொழிற் கவர்ச்சி மிக்கதாக மாற்றவேண்டும். அதற்கு முதலீடுகள் அவசியம். ஆனால் அந்த முதலீடுகளை எந்த நோக்கு நிலையில் இருந்து முன்னெடுப்பது என்பதுதான் இங்குள்ள சவால்.

"நாங்கள் தானம் செய்கின்றோம் அல்லது தொண்டு செய்கிறோம்" என்ற நிதி அதிகார மனோநிலையில் இருந்து அல்ல, மாறாக, தமிழ்த்தேசத்தைக்கட்டியெழுப்புவது. அதற்கு வேண்டிய துறைசார் நிறுவனங்களைக் கட்டியெழுப்புவது என்ற நோக்குநிலையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் தாயகத்தில் முதலீடுகளைச் செய்ய வேண்டும். அதாவது தேச நிர்மானத்தின் பங்காளிகள் என்ற அடிப்படையில் முதலீட்டாளர்கள் தாயகத்தை நோக்கி வரவேண்டும். புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகளை எப்படி தேச நிர்மானத்தின் பங்காளிகளாக மாற்றுவது என்று தாயகத்தில் உள்ள அரசியல் சமூகம் சிந்திக்க வேண்டும்.

முதலாளிகள், அவர்கள் தமிழர்களோ, சிங்களவர்களோ, வெள்ளைக்காரர்களோ யாராக இருந்தாலும், முதலாளிகள்தான். அவர்களிடம் லாப நோக்கம் இருக்கும். முதலாளிகள் அப்படித்தான் சிந்திப்பார்கள். ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளை கொழும்பு மைய நோக்கு நிலையில் இருந்துதான் அணுகுவார். அவர் அப்படித்தான் சிந்திப்பார். ஆனால், முதலீடுகளை தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாகத் திட்டமிட வேண்டியது தாயகத்தில் உள்ள அரசியல் சமூகத்தின் பொறுப்பு, கொழும்பின் நோக்கு நிலையில் இருந்தல்ல அல்லது தனிய லாப நோக்கு நிலையில் இருந்தல்ல. தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற நோக்கு நிலையிலிருந்து முதலீடு செய்யுமாறு, தமிழ் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவேண்டும். அவர்களைத் தேச நிர்மாணத்தின் பங்காளிகளாக்க வேண்டும். பாரதி பாடியது போல "ஆலைகள் செய்வோம் கல்விச் சாலைகள் செய்வோம்"

நிலாந்தன்

# 75 வருடங்களாக கட்டிக்காத்த தமிழரசுக்கட்சி சிதைந்துபோனது கவலைக்குரியது



ஜனநாயக ரீதியாக வாக்கெடுப்பு நடத்தப்பட்டு தெரிவு இடம்பெற்றதோ அதேபோல பொதுச் செயலாளர் ஒரு கனதியான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பதவி. அதிகாரத்துடன் கூடிய பதவி. அந்தப் பதவிக்கான தெரிவை ஒரு வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்படவேண்டும் என்கிற இந்த கோரிக்கை 27ஆம் திகதி சபையில் பலராலும் முன்வைக்கப்பட்டதனால் ஏற்பட்ட குளறுபடிகள் அல்லது அதனுடைய தளம்பல்கள் தான் எங்களை இந்த நிலைக்கு கொண்டுவந்திருக்கிறது. அதாவது மத்திய குழு என்று கூறப்படுகின்ற குழு பெயர்களை எழுதிக் கொண்டுவந்து இவர்களை இந்த இந்த பதவிக்கு நியமிக்க நாங்கள் விரும்புகின்றோம். ஆகவே பொதுச்சபை இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அங்கீகரிக்கவேண்டும் எனக் கூறப்படுகின்ற ஒரு கோரிக்கையை விடுத்ததன் காரணமாக ஏற்பட்ட முரண்பாடுகள் தான் இந்த நிலைக்குக் காரணம்.

தற்போது இரு இடங்களில் அதாவது திருகோணமலையில், யாழ்ப்பாணத்தில் தடை ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருகோணமலையின் மாவட்ட நீதிமன்றத்திலும், அதேபோல யாழ்ப்பாணத்தின் மாவட்ட நீதிமன்றத்திலும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 21ஆம் திகதி நடந்த தலைவர் தெரிவு தொடக்கம் 27ஆம் திகதி நடைபெற்ற தெரிவு வரையில் உள்ள அனைத்து விடயங்களும் யாப்புக்கு முரண்பாடானது அதாவது தமிழரசுக் கட்சியின் யாப்புக்கு முரண்பாடான விடயங்கள் இடம்பெற்றிருக்கின்ற காரணத்தினால் இது தடைசெய்யப்படவேண்டும் அல்லது இரத்துச் செய்யப்படவேண்டும் என்கிற விடயம் அந்த தடையாணையில் கூறப்பட்டிருக்கிறது.

முக்கியமான விடயம் 21ஆம் திகதி சிறீதரன் தெரிவுசெய்யப்பட்டது ஜனநாயக பாரம்பரியங்களுடைய அடிப்படையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அவர் தெரிவு செய்யப்பட்டார் என்பது பொதுவானது. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். அது சம்பந்தமாக எந்த முரண்பாடுகளும் ஏற்படவில்லை. அது சம்பந்தமாக சபையில் 27ஆம் திகதிக்கு முன்போ அல்லது பின்போ ஏற்படவில்லை. ஆனால் 27ஆம் திகதிபொதுச் செயலாளர் என்று கூறப்படுகின்றவரை தெரிவுசெய்யப்படுவதற்கு ஏற்பட்ட முரண்பாடுகள் தான் காரணம். ஏற்கனவே அவர்கள் சண்முகம் குகதாசனை தெரிவுசெய்திருக்கின்றார்கள். சண்முகம் குகதாசன் ஒரு வருடம் கடமையாற்றுவார். மட்டக்களப்பினைச் சேர்ந்த ஸ்ரீநேசன் ஒரு வருடம் கடமையாற்றுவார் என்று கூறப்படுகின்ற இந்த துதிப்பாடுகள் தான் சிக்கல்களுக்கும் சபையினுடைய குழப்பங்களுக்கும் காரணமாக இருந்தது.

இந்த தடையாணை பெறப்படுவதற்கு முன்னர் இன்னுமொரு விடயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்ரீநேசன் அவர்களும், குகதாசன் அவர்களும் உடன்பட்டதாகவும் குகதாசன் தேசிய மகாநாடு நடத்தப்படும் திகதியிலிருந்து அடுத்த வருடம் 21 ஆம் திகதி வரையிலும் பொதுச் செயலாளராக கடமையாற்றுவதாகவும், அடுத்த வருடத்தில் ஸ்ரீநேசன் பொதுச் செயலாளராக கடமையாற்றுவதாகவும் இவ்விருவரும் சம்மதித்து குறித்த ஒப்பந்தமொன்றில் தலைவர் சிறீதரன் அவர்களுக்குக் கீழ் கைச்சாத்திட்டிருக்கிறார்கள். அந்த கைச்சாத்தில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் சாட்சியங்களாக இருந்திருக்கிறார்கள். இந்த நிலையில் தான் இந்த இரு இடங்களிலும் தடையாணை பெறப்பட்டிருக்கின்றது. இந்த தடையாணையில் தீர்ப்பு வரும் வரைக்கும் கட்சியை நடத்தக்கூடாது என்றும் மகாநாடுகளை நடத்தக்கூடாது. தெரிவுசெய்யப்பட்ட அனைத்துப் பதவிகளும் இரத்துச்செய்யப்பட வேண்டும் என்று இந்தத் தடை கோரப்பட்டிருக்கின்றது. ஆனால் முடிவு எவ்வாறு இருக்கும் என்று தெரியாது. எங்களாலும் கூற முடியாது.

திருகோணமலையில் கோரப்பட்ட தடையாணையில் அதாவது தமிழரசுக் கட்சியினுடைய யாப்புக்குப் புறம்பாக பொதுச்சபையில் மேலதிகமான உறுப்பினர்கள் வாக்களித்திருக்கிறார்கள். இந்த வாக்களிப்பு தவறு என்கிற விடயமும் அந்த தடையாணையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாக தெரிவிக் கப்படுகின்றது. பொதுவாகவே அரசியல் யாப்பில் குறிப்பிட்டபடி நடைமுறையில் அதிகாரமுடைய தலைவர் ஒருவருக்கு 15 நபர்களை நியமிக்கும் அதிகாரம் அந்த யாப்பு வழங்கியிருக்கிறது. அதனடிப்படையில் தான் மேலதிகமானவர்கள் பொதுச்சபைக்கு அங் கீகரிக்கப்பட்டிருக்கின்றார்கள். குகதாசன் பொதுச்சபைக்கு மேலதிகமாக 03 நபர்களை நியமித்திருக்கிறார். அதேபோல சம்பந்தன் ஐயாவினது கோரிக்கைக்கு அமையவோ அல்லது வேறு ஒருவரின் கோரிக்கைக்கு அமையவோ ஆறு பேர் பொதுச்சபைக்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுச் சபைக்கு மேலதிகமாக நபர்களை நியமிக்கும் அதிகாரம், பொதுச்சபைக்கு அங்கீகரிக்கும் அதிகாரம் தலைவருக்கு இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக யாப்பு கூறுகின்றது. இவ்விடயம் இந்த வருடம் கடந்த வருடம் மாத்திரமல்ல, கடந்த 16 மகாநாடுகளிலும் இது இடம்பெற்றிருக்கிறது. உதாரணமாக, பாராளுமன்றத்தில் தேர்தல் மூலம் வருகின்றவர்களுக்கு அப்பால் தேசியப் பட்டியலின் மூலம் வருகின்றவர்கள் என்கிற விடயம் இருக்கிறது. சோல்பரி யாப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களை நியமிக்கின்ற அதிகாரம் இருக்கின்றது. இவ்வாறு உலகில் பல நாடுகளில் பல யாப்புகளில் பல அரசியல் செயல்களில் ஒரு நிறுவனத்திற்கு மேலதிகமாக ஒரு அரசியல் நிறுவனத்திற்கு மேலதிகமாக உறுப்பினர்களை நியமிக்கின்ற அதிகாரம் யாப்பில் கூறப்பட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும். இது ஒரு அரசியல் யாப்புக்கோ அல்லது நடைமுறைக்கோ முரணான ஒரு விடயம் அல்ல என்பதை நீதிமன்றம் அதற்கு எந்தமாதிரியான தீர்ப்பு வழங்குகின்றதோ என்று கூறப்படுகின்ற கருத்து எங்களால் கூறப்பட முடியாதுவிட்டாலும் இது தான் நடைமுறையில் இருக்கின்ற உண்மை.





பாராளுமன்ற உறுப்பினர்சுமந்திரன் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு எந்த அளவிற்கு உண்மைத்தன்மை இருக்கின்றது. மூல ஆதாரங்கள் இருக்கின்றது என்கிற விடயங்களை என்னால் கூறமுடியாது. ஆனால் இரு இடங்களிலும் இந்த வழக்கு தொடரப்பட்டதைக் கேள்வியுற்ற எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் தலைவர் சிறீதரன் கோரிக்கை விடுப்பாராகவிருந்தால் நான் தலைவருக்காக, கட்சிக்காக வாதாடத் தயாராக இருக்கின்றேன் எனக் கூறப்படுகின்ற பகிரங்கமான செய்தியை அவர் வெளியிட்டிருக்கின்றார். அந்த வகையில் அவர் எந்தத் தன்மையில் அளவில் வெளியிட்டார் என்பது அது அவருக்குத் தான் வெளிச்சம்.

ஆனால் பொது மக்களின் பார்வையில் அந்த வழக்கு பொது மகனால் தொடக்கப்பட்டிருக்கிறது, ஆணை வேண்டப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திலும் வேண்டப்பட்டிருக்கிறது என்கின்ற விடயம். ஆனால் இந்த வழக்கினைத் தொடர்ந்தவர்கள் யாருடைய பின்னணியில் தொடர்ந்திருக்கிறார்கள். இதனது மூலத்தன்மை என்ன என்கின்ற விடயங்கள் யாருக்கும் தெரியாது. அவர்களுக்குத் தான் வெட்ட வெளிச்சமாகத் தெரியும். சுமந்திரன் குறித்து வெளியாகும் பல கருத்துக்களை வதந்திகள் என்று கூறுவதா அல்லது உண்மைத்தன்மையானது என்பதா என எனக்குத் தெரியவில்லை. சில விடயங்கள் பொதுமக்களால் கூறப்படுகின்றனவாக இருக்கிறது. சில ஊடகங்களிலும் இது சம்பந்தமான செய்திகள் வெளிவந்திருக்கிறது. ஆகவே நாங்கள் சரியாக தெளிவாகத் தெரிந்துகொள்ளாமல் கூறுவது என்னைப்பொறுத்தளவில் பொருத்தமில்லை. இருந்தாலும் காலம்போக மலிந்தால் சந்தைக்கு வந்துதான் ஆகவேண்டும்.

சுமந்திரனை கட்சிக்குள் வெல்ல முடியாது என்றெல்லாம் ஒன்றுமில்லை. விண்ணாதி வின்னர்கள் எல்லாம் இருந்திருக்கின்றார்கள். இது உலகத்தில் இல்லாத புதிய மாற்றமாக இருக்கிறது. சுமந்திரனை வெல்ல முடியாது, சுமந்திரனுக்கு எதிராகப் போராட முடியாது என்று ஒன்றுமில்லை. உலகத்தில் எத்தனையோ மகா பலசாலிகள் இருந்திருக்கின்றார்கள் அவர்களுடைய வரலாறுகள் எல்லாம் குறித்து நாங்கள் அறிந்திருக்கின்றோம். தற்போது கட்சியிலிருந்து சுமந்திரனை நீக்கும் வல்லமை வந்திருக்கிறது. அதாவது அவர் தன்னுடைய சட்ட வல்லமையைக் காட்டி பயமுறுத்துவது என்பதும் கோரிக்கை விடுவது என்பதும் ஒரு பாரம்பரிய ஜனநாயகத்திற்குப் புறம்பான விடயமாகத்தான் அது கருதப்படும். ஆகவே நாங்கள் சட்ட வல்லமையைக் காட்டி நபர்களை அல்லது ஒரு தரப்பினரைப் பயமுறுத்துவது என்பதும் அல்லது பலாத்காரமான கோரிக்கைகளைத் திணிக்க நேரிடுவது என்பதும் எல்லாக் காலத்திலும் எல்லோரிடத்திலும் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவிருக்காது. இருக்க முடியாது என்பதை எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டும்.

தேர்தல் என்று ஒன்று எதிர்காலத்தில் வருகின்றபோது இந்த தடையுத்தரவானது கட்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது உண்மை. தேர்தல் சட்டத்தில் பொதுச்சபை நடத்தப்படவேண்டும், பொதுச்சபைக்குரிய நபர்கள் தெரிவு செய்யப்படவேண்டும், மகாநாடு நடத்தப்படவேண்டும் எனக் கூறப்படுகின்ற சட்டதிட்டங்கள், வரைமுறைகள், ஒழுங்குமுறைகள் இருக்கின்றன. ஆனால் துரதிஸ்டவசமாக தமிழரசுக் கட்சியினுடைய குறித்த மகாநாடுகளை கடந்த 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளில் நடாத்த முடியாமல் போனதற்குக் காரணம் நாட்டினுடைய அபத்தமான சூழ்நிலை. 2021ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொவிட் தொற்று, 2023 இன் பிற்பகுதியில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக நடாத்த முடியவில்லை. ஆனால் அதனைப் புரிந்துகொண்டு சுமுகமாக அழைப்பினை இரு பக்கத்தாலும் ஒரு உடன்பாட்டிற்கு வந்து மகாநாட்டினை நடத்துவது மிகவும் முக்கியமான விடயம்.

அதேநேரத்தில் இந்த வருடம் நடக்கவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தல், அடுத்த வருடம் பொதுத்தேர்தல், மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தல் நடத்தப்படுகின்றபோது கட்சியினுடைய பதிவு, கட்சியினுடைய அங்கீகாரம் தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத அளவிற்கு இருந்தால் நாங்கள் ஒரு ஆபத்தான சூழ்நிலைக்குத் தள்ளப்படுவோம்.

11ஆம் பக்கம் பார்க்க...

திருமலை நவம்



# பசுமை எனும் பேரபாயம்

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை இன்று அனைவருமே அனுபவிக்கின்ற நிலையில் பசுமை நோக்கிய நகர்வு குறித்த விழிப்புணர்வும் அக்கறையும் பரந்துபட்டளவில் மக்களைச் சென்றடைந்துள்ளது. பசுமையின் பெயரால் வளச்சுரண்டல்கள், உரிமை மறுப்புகள், மோசடியான வர்த்தகம், போலியான திட்டங்கள் என அனைத்தும் அரங்கேறுகின்றன. குறிப்பாக மூன்றாமுலக நாடுகள் இதற்குப் பலியாகின்றன. இலங்கையும் இதற்கு விலக்கல்ல. இலங்கை உயிரினங்களின் செறிவு அடிப்படையில் ஆசியப் பிராந்தியத்தில் முக்கியமான நாடாக கருதப்படுகிறது. ஆனால் இலங்கையின் உயிர்ப்பல்வகைமை மிகப்பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் காலநிலை மாற்றத்தின் கொடும் விளைவுகளையும் இலங்கை சந்தித்துள்ளது. இவை குறிப்பாக விவசாயத் துறையை சீரழித்துள்ளது. உயரும் கடல்மட்டம் இலங்கைக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உருவெடுக்கும் வாய்ப்புகளும் உண்டு. இத்தகைய பின்புலத்தில் இலங்கைச் சூழலில் பசுமை எனும் பெயரால் நடைபெறுகின்ற விடயங்களைத் தத்துவார்த்த ரீதியிலும் வரலாற்று நோக்கிலும் சமகால நிகழ்வுகளுடனும் நோக்க இத்தொடர் விழைகிறது. பசுமையின் பெயரால் நடந்தேறுபவை ஏற்படுத்தும் சமூகப் பொருளாதார மாற்றங்களையும் அதன் அரசியல் சிக்கல்களையும் சேர்த்தே 'பசுமை எனும் பேரபாயம்' எனும் இத்தொடர் கவனம் செலுத்துகிறது.

**தொடக்கக் குறிப்புகள்**

இலங்கையின் கடந்த அரைநூற்றாண்டு கவனங்கொள்ளத் தவறிய முக்கியமான துறைகளில் ஒன்று சூழலியல். இன முரண்பாடும் பொருளாதாரச் சிக்கல்களும் சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் சமூகப் பொருளாதார அரசியலரங்குகளை ஆக்கிரமித்து நின்றன. இப்பின்புலத்தில் நமது இயற்கையும் வளங்களும் அபிவிருத்தியின் பெயரால் கொள்ளையடிக்கப்பட்டன. விவசாய மையப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டிருந்த நாடு சேவை மையப் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்தது. வளமான மண்ணும் கடலும் தந்திருக்கக் கூடிய பயன்களை வினைத்திறனுடனும் பேண்தகைமையுடனும் தக்கவைக்க நாம் தவறினோம். நாட்டின் இயற்கையை சீரழித்தந்த வழி தன்னிறைவுப் பொருளாதார மாதிரிக்கு எவ்வாறு குழிபறிக்கப்பட்டது என்பது இன்று இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்துக் கவனம் குவிப்போர் பேசத் தவறுகின்ற விடயங்களில் முக்கியமானது.

இலங்கையின் சூழலியல் வரலாற்றை மூன்று பகுதிகளாகப் பிரிக்கவியலும். முதலாவது, கொலனியாதிக்கத்துக்கு முந்தையது. இரண்டாவது போத்துகேய, டச்சு மற்றும் பிரித்தானியக் கொலனியாதிக்க காலம். மூன்றாவது சுதந்திரத்துக்குப் பிந்தையது. இக்கட்டுரையில் கொலனியாதிக்கத்துக்கு முந்தைய கால சூழலியல் சார்ந்த ஆய்வுகள் சொல்கிற முக்கியமான செய்திகளையும் கொலனியாதிக்கம் எவ்வாறு பொருளாதார நோக்கங்களுக்காக இலங்கையின் காடுகளையும் உயிர்ப்பல்வகைமையையும் அழித்தது என்பதையும் ஆராய்கிறது.

இலங்கையின் காடுகளின் அளவுகளை ஒரு உதாரணத்துக்கு எடுத்துக்கொண்டால் இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு காடுகள் அழிக்கத் தொடங்கும்வரை பல்வகைமையில் காடுகள் முக்கிய பங்காற்றின. 1881 இல் 84 வீதமான பகுதி காடுகளால் சூழப்பட்டதாக இருந்தது. 1956 இல் இது 56 வீதமாகி 1996 இல் 30 வீதமாகி இப்போதைய தரவுகளின்படி இது கிட்டத்தட்ட 16 வீதமாகவுள்ளது. இந்த மாற்றம் ஏன் நிகழ்ந்தது? இது நாட்டின் சூழலியலில் ஏற்படுத்திய மாற்றங்கள் என்ன போன்ற வினாக்கள் அடிப்படையானவை.

இலங்கைத் தீவு குறிப்பிடத்தக்க உயிரியல் பன்முகத்தன்மையைக் கொண்டிருக்கிறது. உயிரினங்களின் செறிவு அடிப்படையில் ஆசியப் பிராந்தியத்தில் மிகவும் சிறப்பான நாடாக இலங்கை கருதப்படுகிறது. நாட்டின் சுற்றுச்சூழல், தட்பவெப்பநிலை, மண் மற்றும் நிலப்பரப்பு மாறுபாடு ஆகியன பல்வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு சாதகமான நிலைமைகளை வழங்குகிறது.

தேசிய சிவப்புப் பட்டியலிலுள்ள பல அழிவுறும் ஆபத்திலுள்ள (endangered) உயிரினங்களும் தாவரங்களும் இலங்கையில் இருக்கின்றன. இதனால் இலங்கை உயிர்ப்பல்வகைமை அடிப்படையில் முக்கியமானது. குறித்த பட்டியலின் அடிப்படையில் இலங்கையில் 253 நில நத்தை இனங்கள், 245 வகையான பட்டாம்பூச்சிகள், 240 பறவைகள், 211 ஊர்வன, 748 முதுகெலும்புள்ள உயிரிகள், 1,492 முதுகெலும்பற்ற உயிரிகள், 336 வித்திலித் தாவரங்கள் மற்றும் 3,154 பூச்செடிகள் உள்ளன. இந்த உயிரியல் செழுமையானது இலங்கைக்கு மட்டுமன்றி உலகத்துக்கே முக்கியமானது. தற்போது, நாட்டில் இருக்கும் 3,000 பூக்கும் தாவரங்களில் கால்வாசி அழிவுறும் அபாயத்தில் இருக்கிறது. இதேபோலவே நாட்டில் உள்ள முதுகெலும்புள்ள உயிரினங்களில் 43 வீதமானவை அழிவுறும் ஆபத்தில் உள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

சிறிய நாடாக இருந்தாலும், காடு முதல் விவசாயம், நீர்வாழ் மற்றும் கடல் சூழல்கள் வரையிலான பரந்த அளவிலான சுற்றுச்சூழல் அமைப்புகளை இலங்கை கொண்டிருக்கிறது. நாட்டில் இருக்கும் பல வெப்ப மண்டலங்கள் மழைக்காடுகள், மலை மேகக் காடுகள், உலர் மண்டல பருவக்காடுகள் மற்றும் வறண்ட முட்புதர்க்காடுகள் உள்ளிட்ட பல்வகைக் காடுகள் உயிர்ப்பல்வகைமைக்கு முக்கிய பங்களிக்கின்றன. இலங்கையின் கடல்வளமும் பல்வகைப்பட்ட அரிய கடலுயிரிகளின் வாழ்விடமாக உள்ளது.

இலங்கையின் ஈரநிலங்களும் பன்முகத்தன்மை கொண்டவை. இதில் 103 பெரிய ஆறுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சதுப்பு நிலங்கள் மற்றும் ஈரநில இனங்களை உள்ளடக்கிய சுமார் 12,000 குளங்கள் உள்ளன. பல நூற்றாண்டுகளாக நாட்டில் செழித்தோங்கியுள்ள தனித்துவமான நீர்முகாமைத்துவ அமைப்பு, விவசாயிகளின் நடைமுறைகள் ஆகியன மாறுபட்ட சூழலியல் நிலைமைகளுக்கு ஏற்றவாறு இலங்கையை வளமான விவசாய - பல்லுயிரியலைத் தக்கவைக்கும் நாடாக மாற்றியிருக்கிறது.

எவ்வாறாயினும், தற்போது, இலங்கையின் தனித்துவமான உயிரியல் பன்முகத்தன்மை பொதுவான வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட 240 பறவை இனங்களில் 27%, 66% நீர்நில வாழ் உயிரிகள், 56% பாலூட்டிகள், 49% நன்னீர் மீன் இனங்கள் மற்றும் 59% ஊர்வன ஆகியன அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. குறிப்பாக, இலங்கையின் முதன்மையான சின்னங்களில் ஒன்றான யானையின் எதிர்காலமே கேள்விக்குறியாகியுள்ளது. பூக்கும் தாவரங்களைப் பொறுத்தவரை, அடையாளம் காணப்பட்ட 3,154 இனங்களில் 1,385 இனங்கள் அச்சுறுத்தலுக்கு உட்பட்டவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன, அவற்றில் அதிகப் பெரும்பான்மையானவை (594 தாவரங்கள்) இலங்கையில் மட்டுமே உள்ளன.

நாட்டின் உயிர்ப் பல்வகைமையில் இருந்து பெறப்படும் நன்மைகள் இலங்கைப் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்குகின்றன. உண்மையில் மீன்பிடி, விவசாயம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளின் ஆதார சுருதியாக இந்த உயிர்ப்பல்வகைமை விளங்குகிறது. இன்று நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் போதும் பொருளாதார மீட்சியில் முக்கிய பங்காற்றக்கூடிய உயிர்ப்பல்வகைமை பற்றிய கவனம் எமக்கு சிறிதளவும் இல்லை என்பது வருத்தத்துக்குரியது. வளமான சமூகத்திற்கு வளமான சூழலியல் நிலவ வேண்டும். சுத்தமான காற்று, சுகாதாரமான குடிநீர், சத்தான உணவு ஆகியவை அடிப்படையானவை. இம்மூன்றையும் தக்கவைக்க சூழலியல் பற்றிய கவனம் அடிப்படையானது.

இலங்கையில் சுமார் 1.42 மில்லியன் வீட்டுத் தோட்டங்கள் உள்ளன (மொத்தம் சுமார் 76,483 ஹெக்டேர்) அவை நாட்டின் விவசாயப் பல்லுயிர் பெருக்கத்தின் இதயமாக கருதப்படுகின்றன. அவை நாடு முழுவதும் (உலர் ஈர மண்டலங்கள் இரண்டிலும்) பரந்துள்ளன. நூற்றுக்கணக்கான பயனுள்ள தாவர இனங்கள் மற்றும் அவற்றின் மரபணு வேறுபாடுகளைப் பாதுகாப்பதில் வீட்டுத் தோட்டங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. அதேநேரத்தில் இத்தோட்டங்கள் கிராமப்புற மற்றும் புறநகர்ப் பகுதிகளின் குடும்பங்களுக்கு அரிசி, கிழங்குகள், பயன்படுத்தப்படாத பழ வகைகள், நாட்டுக் காய்கறிகள், இலைக் காய்கறிகள், வாசனைத் திரவியங்கள் போன்ற சத்தான உணவுகளை சீராக வழங்குகின்றன. அத்துடன் வீட்டு வைத்தியம் மற்றும் பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் மருத்துவத் தாவரங்கள் இத்தோட்டங்களிலேயே வளர்க்கப்படுகின்றன. இவை ஆரம்பச் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் வணிக முயற்சிகளுக்கான வாய்ப்பை வழங்குகின்றன.

இன்று நாம் வாழும் சூழலைப் பற்றிய அக்கறை குறைவான, உயிர்ப் பல்வகைமையைத் தக்கவைப்பதில் கவனம் குவிக்காத ஒரு சமூகமாக இலங்கைச் சமூகம் எப்படி மாறியது? பன்நெடுங்காலமாகவே சூழலியல் மீது அக்கறையற்ற சமூகமாகவா இலங்கையர்கள் இருந்தார்கள்? அதன் தொடர்ச்சியைத்தான் இப்போது காண்கிறோமா? அவ்வாறு இல்லை எனில் இம்மாற்றம் எப்போது, எப்படி, ஏன் நிகழ்ந்தது? இவற்றை ஒரு வரலாற்றுப்புல நோக்கில் விசாரிக்கலாம்.

**பண்டைய இலங்கையில் சூழலியல்**

அகழ்வாராய்ச்சி ரீதியான ஆய்வுகள் பண்டைய இலங்கையின் வாழ்வியலைப் பற்றிய ஒரு சித்திரத்தைத் தருகின்றன. அவை குறிப்பாக இரண்டு விடயங்களில் கவனம் குவிக்கின்றன. முதலாவது பண்டைய கால இலங்கையின் விவசாயம், பயிர்ச்செய்கை தொடர்பானது. இரண்டாவது நீர்முகாமைத்துவம் தொடர்பானது.

இலங்கை பாரம்பரியமாக விவசாய நாடாகும். பண்டைய இலங்கையர்கள் நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள அபிவிருத்தியில் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். வருடத்தில் 3-4 மாதங்கள் மட்டுமே மழை பெய்யும் நாட்டின் வறண்ட வலயத்தில், மழை நீரை நேரடியாகச் சேமித்து வைப்பதற்கும், வற்றாத ஆறுகளில் இருந்து திருப்பிவிடப்படும் நீரைச் சேமிப்பதற்கும் அவர்கள் நீர்த்தேக்கங்களை கட்டினார்கள். இதன் விளைவாக, நீர்வள நாகரிகம் அதன் விவசாயத்திற்கான நீர்ப்பாசன முறைகளை பெரிதும் சார்ந்திருந்தது.



பண்டைய இலங்கையில் அனைத்துக் கிராம விவசாய - சுற்றுச்சூழல் வளாகங்களும் பொதுவான குணாதிசயங்களைக் கொண்டிருந்தன. அதனால் அவை பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருந்தன. ஒவ்வொரு கிராமச் சுற்றுச்சூழல் வளாகமும் நெற்பயிர்ச்செய்கை, மாற்றுப் பயிர்ச்செய்கை, வீட்டுத்தோட்டம், கிராமத்துக்குரிய காடுகள், மீன்பிடித்தல் மற்றும் ஓரளவிற்கு கால்நடை வளர்ப்பு ஆகிய முக்கிய கூறுகளைக் கொண்டிருந்தன.

அந்தக் காலத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பிரதான பயிர் நெல். நெற்பயிர்ச் செய்கைக்கு இரண்டு வெவ்வேறு நீர்ப்பாசன முறைகள் பயன்படுத்தப்பட்டன. ஒரு வகை பயிர்ச்செய்கையானது தொட்டிப் பாசனத்தை அடிப்படையாகக் கொண்டது. செயற்கையாக கட்டப்பட்ட தொட்டிகளில் மழை நீர் சேகரிக்கப்பட்டது. மழைக்காலம் முடிந்து தண்ணீர் தேவைக்கேற்ப வயல்களுக்கு வாய்க்கால் மூலம் விநியோகிக்கப்பட்டது. சிறிய தொட்டிகள் இடையிடையே நுண்ணிய நீர்ப்பிடிப்புகளுடன் அடுக்கடுக்காக அமைக்கப்பட்டன. அருவியின் மேல் பகுதியில் உள்ள நெல் வயல்களில் இருந்து வரும் வடிகால் கீழே உள்ள நெல் வயலில் மறுபயன்பாட்டிற்காக கீழ்நிலை தொட்டியில் பாய்ந்தது.

நீர்ப்பாசனத்தின் மற்றொரு வடிவமானது, பெரிய ஆறுகளில் இருந்து அகழ்வாய்வுகளை தொலைதூர வயல்களுக்கு அல்லது நீர்த்தேக்கங்களைக் கட்டுவதற்கு ஏற்ற இடங்களுக்கு இழுப்பது. மிகக் குறைந்த சாய்வுகளுடன் நீண்ட கால்வாய்களை அமைப்பதற்கான திறன்கள் குறிப்பிடத்தக்கவை. இன்று அதிநவீனக் கருவிகள் மட்டுமே அதே துல்லியத்துடன் வேலை செய்ய முடியும். அந்த முறையில் கட்டப்பட்ட தொட்டிகள் மற்றும் கால்வாய்கள் விவசாயிகளுக்கு நன்மையை அளித்தது மட்டுமல்லாமல் நிலப்பரப்பின் பன்முகத்தன்மையையும் கட்டமைப்பையும் வளப்படுத்தியது. மீன்கள், பறவைகள் மற்றும் பிற விலங்குகளின் பல்வேறு இனங்கள் தொட்டிகளில் வசித்து வந்தன. விளிம்புகளில் மரங்கள் வளர்க்கப்பட்டு குளிர்ச்சியான சூழல் உருவாக்கப்பட்டது.

இலங்கையர்கள் கால்நடைகளை வளர்த்து, எருதுகளைக் கொண்டு வயல்களை உழுதார்கள். எருமைகள் வயல்களை உழுவதற்கும், நெற் கதிரடிப்பதற்கு மட்டும் பயன்படவில்லை. அவை சமூக அமைப்பின் முக்கிய அங்கமாக அமைகின்றன. அறுவடை செய்த பிறகு, தங்கள் எருமைகள் மற்றும் பிற கால்நடைகளை வயலில் எஞ்சியிருக்கும் நெல் எச்சங்களை உண்ண அனுமதித்தனர். அதே நேரத்தில் அவற்றின் சாணம் ஒரு உரமாக செயல்பட்டது. அதுமட்டுமின்றி, எருமைக் கொட்டகைகளில் தேங்கியிருந்த சாணம் நெல் வயல்களில் அடித்துச் செல்லப்பட்டது. இரவு நேரங்களில் வீட்டுத்தோட்டத்தில் உள்ள மரங்களில் மாடுகளைக் கட்டி வைத்தார்கள். இதன் மூலம் அவற்றின் சாணம், சிறுநீர் ஆகியவை மரங்களின் வினைத்திறனை அதிகரிக்கப் பயன்படுத்தப்பட்டன.

தொடரும்...

மீநிலங்கோ தெய்வேந்திரன்



# பிராந்திய செய்திகள்



## கழிவு மீள்சுழற்சி நிலைய பகுதியில் யானைகள்



அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மீள்சுழற்சி நிலைய பகுதியில் மலைபோல் குவிந்துள்ள குப்பைகளை உண்ண யானைகள் தினமும் வருகை தருகின்றன. இவ்வாறு வரும் யானைகள் சில அருகில் உள்ள பொதுமக்களின் சொத்துக்களுக்கும் சேதங்களை விளைவிப்பதனால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இக்காட்டுயானைகளை கட்டுப்படுத்த யானை வேலிகள் அமைப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோதிலும் யானைகள் அத்துமீறி வீதிகள் பயிர் நிலங்களை நோக்கி வருகை தருகின்றன.

அம்பாறை நகரில் இருந்து குப்பைகள், வாகனங்கள் மூலம் தினமும் கொண்டுவரப்பட்டு கொட்டப்படுகின்றதுடன் மலைபோல் குவிந்துள்ள குறித்த குப்பைகளை யானைகள் தினமும் உண்ண வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பெருமளவான காட்டு யானைகள் குப்பை மேடுகளை தேடி உணவுக்காக வருகின்றன. தாவர உண்ணியான காட்டு யானைகள், குப்பைகள், பொலித்தீன்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் உள்ளிட்ட கழிவு பொருட்களை உட்கொள்வதனால் யானைகளின் இறப்பு வீதம் அதிகரித்து வருகின்றது. யானை நாளொன்றுக்கு சுமார் 150 கிலோ உணவை உட்கொள்வதாகவும் 160 லீட்டர் தண்ணீரையும் குடிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலங்களில் யானை - மனித மோதலால் யானைகளும் மனித உயிர்களும் இழக்கின்ற சந்தர்ப்பங்கள் சடுதியாக அதிகரித்துள்ளன. அத்துடன் யானை - மனித மோதலால் அதிகளவான மனித உயிரிழப்புக்கள் இடம்பெறும் நாடுகளில் இரண்டாவதாக இலங்கை காணப்படுகிறது.

யானை - மனித மோதலை குறைப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதும் அவற்றை முறையாக அமுல்படுத்தப்படாமை மற்றும் மேற்பார்வை செய்யப்படாமை காரணமாக யானை - மனித மோதலின் இழப்புக்களை குறைப்பது இன்றுவரையும் முடியால் உள்ளமை வெளிப்படையாகும்.

இதனால் குறித்த மோதலினால் யானைகளும் மனிதர்களும் தொடர்ச்சியாக மரணித்து வருகின்றனர். எனவே மனிதன் மற்றும் யானைகளை காப்பாற்றவும் சொத்துக்களை பாதுகாக்கவும் உடனடியாக தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இவ்வாறு தொடர்ச்சியாக யானை மற்றும் மனித மரணங்கள் நிகழ்ந்து வந்தாலும் அவற்றினை நிவர்த்திப்பதற்கு அல்லது குறைப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டிருக்கின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## கடன் மறுசீரமைப்பே இன்றைய சவால்



நாடு அண்மைக்காலமாக எதிர்கொண்டுள்ள மிகவும் சவாலான பொருளாதாரப் பிரச்சினை கடன் மறுசீரமைப்பு என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், ஜூன் மாதத்திற்குள் முழு கடன் மறுசீரமைப்பையும் நிறைவு செய்வதே இலக்கு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வெளிநாட்டுக் கடன் பலதரப்பு மற்றும் இருதரப்புக் கடன் என இரு பகுதிகளைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், பலதரப்புக் கடன் தொடர்ச்சியாக செலுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இருதரப்பு வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருவதாகவும், நாடுகளுக்கு இடையிலான கடன் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மார்ச் மாத இறுதிக்குள் முடிக்க முடியும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரலுக்குள் இறையாண்மை பத்திரங்கள் தொடர்பான கலந்துரையாடல்களையும் ஜூன் மாதத்திற்குள் கடன் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடலையும் நிறைவு செய்வதே இலக்கு என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார்.

## விவசாயத்திற்கு முன்னுரிமை – ஜனாதிபதி



மஹாகனதராவ குளத்தை நீராதாரமாக கொண்ட அனுராதபுரம் நீர் வேலைத் திட்டத்தை (15) மக்கள் பாவனைக்காக கையளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதனை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

இதன்போது விவசாயிகள் ஜனாதிபதியிடம் தங்களது பிரச்சினைகளை நேரடியாக கூறியதோடு, அதற்கு ஜனாதிபதி சாதகமாக பதிலளித்தார். வேலைத் திட்டத்திற்கான எதிர்ப்பு குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, நீர்த்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதால், எதிர்ப்புக்களை கைவிடுமாறும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சிந்துக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அது தொடர்பிலான மக்களின் யோசனைகளை இரண்டு வாரங்களுக்குள் பெற்றுத்தருமாறும், அவற்றில் சாதகமான விடயங்களை விரைவில் நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மஹாகனதரா குளத்தை அண்மித்து வசிக்கும் விவசாயிகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என நம்புவதாக மஹாகனதரா ஒருங்கிணைந்த விவசாயிகள் சங்கத் தலைவர் சுபசிங்க ரத்நாயக்க தெரிவித்தார். மஹாகனகதராவ குளத்திற்கு நீரைக் கொண்டு வரும் கால்வாய்களைப் புனரமைப்பதற்குத் தேவையான நிதியை வழங்கினால் பெருமளவிலான நீரை சேமிக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, மஹாகனதராவ குளத்தின் புனரமைப்பு பணிகளுக்கு இவ்வருடத்தில் வழங்கப்பட்டிருக்கும் ஒரு பில்லியன் ரூபாவை உடனடியாக பயன்படுத்துமாறும் வலியுறுத்தினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, "இந்த வேலைத்திட்டத்தை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்தவேண்டும். இந்த திட்டத்தை இடைநடுவில் கைவிட முடியாது. நாம் எல்லா சந்தர்ப்பங்களிலும் விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். இதுவரையில் எல்லா அரசாங்கத்திலும் நீர் வழங்கல் சபை ஒரு அமைச்சின் கீழும் நீர்ப்பாசன திணைக்களம் ஒரு அமைச்சின் கீழும் காணப்பட்டது. இம்முறை அவை இரண்டையும் ஒன்றிணைத்து ஒரு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அதனால் இந்த வேலைத் திட்டத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்த தீர்மானங்களை எடுக்கவேண்டும்." என்று ஜனாதிபதி வலியுறுத்தினர்.

## அம்பாறை மாவட்ட ஆசிரியர்களை சொந்த மாவட்டத்தினுள் இடமாற்ற தீர்மானம்

வெளிமாவட்டத்திற்கு இடமாற்றம் கிடைக்கப்பெற்ற அம்பாறை மாவட்ட ஆசிரியர்களை மாத்திரம் அவர்களின் மேன்முறையீட்டின் பின்னர் சொந்த மாவட்டத்தினுள் இடமாற்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் பல தரப்பினரின் வேண்டுகோளுக்கமைய அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது, அண்மையில் அம்பாறை மாவட்ட கல்வி வலயங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பல தரப்பினரும் வேண்டுகோள்களை முன்வைத்தனர். இதற்கமைய மாவட்டத்தில் ஆசிரியர் வெற்றிடங்கள் அதிகம் காணப்படும் நிலையில் மாவட்டத்திற்கு வெளியே ஆசிரியர்கள் இடமாற்றப்படுவதை இடை நிறுத்தி மாவட்டத்திற்குள் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவது என்று ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் ஆசிரிய இடமாற்றத்தில் உள்ள முரண்பாடுகளை கண்டறிந்து குறித்த விடயத்தை சீர்செய்வதற்காக மேன் முறையீடு செய்வதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது. அதாவது முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளதுடன் வெள்ளிக்கிழமை (16) வரை மேன் முறையீடு செய்ய முடியும்.

ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைய மாணவர்களின் கல்விக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் எதிர்வரும் காலங்களில் இவ்விடயம் மேன்முறையீட்டின் அடிப்படையில் ஆராயப்பட்டு அம்பாறை மாவட்ட ஆசிரியர்கள் மாத்திரம் சொந்த மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும்.

மேலும் இதுவரை அம்பாறை மாவட்டத்தில் இருந்து கடந்த காலங்களில் வெளிமாவட்டத்தினுள் ஆசிரியர்களாக கடமையாற்றி 5 முதல் 8 வரை வருடங்களை நிறைவு செய்த ஆசிரியர்கள் தமது சொந்த மாவட்டமான அம்பாறை மாவட்டத்தினுள் மீண்டும் இடமாற்றம் பெற்று வருவது கேள்விக்குறியாகியுள்ளதுடன் ஆசிரியர் இடமாற்றத்தில் சமநிலை தன்மை குறித்த கேள்வியும் எழுந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

- பாறுக் ஷிஹான்



# சினி துளிகள்



## நயனுடன் இணையும் கவின்





சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு கடந்த சில வருடங்களாக ஏகப்பட்ட பிரபலங்கள் வருகிறார்கள், வெற்றியும் பெறுகின்றனர்.

சந்தானம், சிவகார்த்திகேயன், ரோபோ ஷங்கர் என இப்படி பல பிரபலங்களை கூறிக்கொண்டே போகலாம்.


அந்த லிஸ்டில் இணைந்தவர் தான் கவின். சரவணன் மீனாட்சி தொடரில் நாயகனாக நடித்து மக்களின் ஆதரவை பெற்றவர் பிக்பாஸிலும் கலந்துகொண்டார்.

ஆனால் நிகழ்ச்சி மூலம் கவின் மக்களின் வெறுப்பை பெற்றார். ஆனால் அந்த இமேஜை போக்கும் அளவிற்கு டாடா என்ற படம் அவருக்கு பெரிய வளர்ச்சியை தேடிக்கொடுத்துள்ளது.

வெற்றிமாறன் படங்களை இயக்குவதை தாண்டி நிறைய படங்களை தயாரித்தும் வருகிறார். அப்படி அடுத்து விக்ரனன் அசோகன் என்பவர் இயக்கும் புதிய படத்தை தயாரிக்க இருக்கிறாராம்.

நயன்தாரா, கவின் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்க கமிட்டாகியுள்ளார்களாம். விரைவில் இப்படத்திற்கான அறிவிப்புகள் வெளிவரும் என கூறப்படுகிறது.

## குறும்படத்தின் மூலமாக மீண்டும் ஜனகராஜ்




தமிழ் சினிமாவில் 80, 90 காலகட்டத்தில் பிரபலமாக இருந்த நடிகர் ஜனகராஜ். இவர் ஒரு படத்தில் பொண்டாட்டி ஊருக்கு போயிட்டா என்று கூறிய வசனம் இப்போதும் பல கணவர்மார்கள் பயன்படுத்தி வருகிறார்கள், அந்த அளவிற்கு இந்த டயலொக் பேமஸ்.

100க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நகைச்சுவை கேரக்டரிலும், குணச்சித்திர வேடத்திலும் நடித்து பிரபலமானவர்.

ஆரம்ப காலகட்டத்தில் கமல்ஹாசன், ரஜினி படங்களில் அதிகம் நடித்துள்ளார். பின் பல வருடங்களுக்கு பிறகு விஜய் சேதுபதி, த்ரிஷா நடித்த 96 படத்தில் பள்ளி பாதுகாவலராக நடித்திருப்பார்.

அந்த 96 படத்திற்கு பிறகு மீண்டும் ஜனகராஜை சினிமா பக்கம் காணவில்லை. இந்த நேரத்தில் தான் நடிகர் விஜய் சேதுபதி தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு புதிய படத்தின் ஃபஸ்ட் லுக் வெளியிட்டுள்ளார்.

அதுவேறு யாரு படமும் இல்லை, நடிகர் ஜனகராஜ் அவர்கள் தாத்தா என்ற குறும்படத்தில் நடித்திருக்கும் ஃபஸ்ட் லுக் போஸ்டர் தான் அது.

அதில் அவர் உடல் எடை சுத்தமாக குறைந்து காணப்படும் புகைப்படம் பார்த்து ரசிகர்கள் வருத்தம் அடைந்துள்ளனர், இன்னொரு பக்கம் படத்திற்கும் வாழ்த்து கூறி வருகின்றனர்.

## தேவைப்பட்டால் விஜய்யுடன் நிற்பேன்

நடிகர் விஜய். தமிழ் சினிமா பெருமையாக கொண்டாடும் ஒரு பிரபலம். இவர் படம் வந்தாலே தமிழ்நாடு திருவிழா கோலமாக இருக்கும்.

கடைசியாக இவரது நடிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் லியோ திரைப்படம் வெளியாகி இருந்தது. அப்படம் மாபெரும் வெற்றியடைய விஜய் சூப்பராக வெற்றிவிழா ஏற்பாடு செய்து கொண்டாடினார்.

தற்போது வெங்கட் பிரபு இயக்கத்தில் தனது 68வது படத்தில் நடித்து வருகிறார். படத்திற்கு கோட் என பெயர் வைத்துள்ளனர். அடுத்தக்கட்ட படப்பிடிப்பு இலங்கையில் நடக்கும் என கூறப்படுகிறது.

விஜய் அண்மையில் ரசிகர்கள் கொண்டாடும் வகையில் ஒரு சூப்பரான அறிவிப்பை வெளியிட்டார். தான் அரசியலுக்கு வருவதாகவும், கட்சிக்கு தமிழக வெற்றி கழகம் என பெயரிடப்பட்டுள்ளதாக அறிக்கை வெளியிட்டார்.

இந்த நிலையில் விஜய்யின் அரசியல் என்ட்ரி குறித்து சமுத்திரக்கனியிடம் கேட்டபோது, விஜய் அரசியலுக்கு வந்தது மிகவும் மகிழ்ச்சியான விஷயம். தேவைப்பட்டால் அவருடன் கூட நிற்பேன் என கூறியுள்ளார்.





## கோட்ஸில்லா அண்ட் கொங் - ஓர் புதிய சாம்ராஜ்யம்

ஹொலிவுட் திரையுலகில் மிகவும் பிரபலமான, ரசிகர்களை கவரக்கூடிய கதைக்களம் கொண்ட திரைப்படங்கள், கோட்ஸில்லா மற்றும் கிங் கொங் திரைப்படங்கள். இந்த இரண்டையும் முதல் முறையாக கோட்ஸில்லா VS கொங் எனும் திரைப்படத்தில் இணைத்தனர். கதையின்படி இந்த மாஸ்டர்கள் அனைத்தும் பூமியின் காவலர்களாக இருந்தவர்கள் என கூறுகிறார்கள்.

பூமிக்கு எப்போதெல்லாம் ஆபத்து வருகிறதோ, அப்போதெல்லாம் இவர்கள் வருவார்கள் என்று தான் கோட்ஸில்லா மற்றும் கொங் இருவரையும் அடையாளப்படுத்தி வருகின்றன. இதுவரை வெளிவந்த படங்களிலும் அப்படி தான் காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த வரிசையில் அடுத்ததாக திரைக்கு வரவிருக்கும் திரைப்படம் தான் கோட்ஸில்லா அண்ட் கொங்: ஓர் புதிய சாம்ராஜ்யம்.

இதற்கு முன் வெளிவந்த கோட்ஸில்லா VS கொங் படத்தில் இருவரும் எதிரிகளாக இருந்தனர். கிளைமாக்ஸ் காட்சியில் ஒன்றிணைந்து வில்லனுக்கு எதிராக சண்டைபோட்டனர்.

பிரச்சினைகள் முடிவுக்கு வந்ததன் காரணமாக இருவரும் தங்களுடைய இருப்பிடத்திற்கு சென்றுவிட்டனர். ஆனால், தற்போது மீண்டும் ஒரு பிரச்சினை எழுந்துள்ளது. ஸ்கார் கிங் என்கிற வில்லன் மூலம் வருகிற பிரச்சினையை கோட் ஸில்லா அண்ட் கொங் இருவரும் இணைந்து எதிர்கொள்கிறார்கள்.

கோட்ஸில்லா அண்ட் கொங்: ஓர் புதிய சாம்ராஜ்யம் எனும் தலைப்பிடப்பட்டுள்ள இப்படத்தின் முதல் டிரைலர் கடந்த சில மாதங்களுக்கு முன் வெளிவந்த நிலையில், தற்போது இரண்டாவது டிரைலர் வெளியாகியுள்ளது.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும்

# நடந்தது என்ன?



**சுழியோடி**

**34**

*2006 ஒகஸ்ட் 11இல்* விடுதலைப் புலிகள் யுத்தத்தை ஆரம்பித்ததுடன் வன்னிக்கான கதவுகள் பெரும்பாலும் மூடப்பட்டுவிட்டன. ஒரு பக்கத்தில் சிறிலங்கா ராணுவம் பாதைகளை மூடியது என்றால் மறுபுறத்தில் புலிகள் சனங்களுக்கான தொலைத் தொடர்புகள், போக்குவரத்து, பயண அனுமதி எல்லாவற்றையும் மூடினார்கள். வன்னி மக்கள் இரண்டு தரப்பினருடைய நெருக்கடிகளுக்கும் முற்றுகைக்கும் உள்ளாக வேண்டியதாகியது. யுத்தம் ஓய்வற்று நடந்த இரண்டரை ஆண்டுகளிலும் வன்னி மக்கள் பட்ட துயரங்களும் கொடுமைகளும் அழிவுகளும் அவமானங்களும் சாதாரண மானவையல்ல.

போர் தொடங்கியவுடன் புலிகள் முதலில் செய்த வேலை கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டதுதான். பால், வயது வேறுபாடு இல்லாமல் எல்லாக் குடும்பங்களில் இருந்தும் போருக்கு வர வேண்டும் என்று கட்டாயப்படுத்திப் பிள்ளைகளைப் பிடித்துச் சென்றனர். அப்போது இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வன்னியில் இருந்தது. ஐ.நா. உள்ளிட்ட தொண்டு நிறுவனங்கள் பலவும் வன்னியிலிருந்தன. புலிகளின் ஊடகங்கள் கட்டாய ஆள் சேர்ப்பை வலியுறுத்தியும் அதை நியாயப்படுத்தியும் பரப்புரை செய்தன. இவை எதைப்பற்றியும் இந்தச் சர்வதேச அமைப்புகளும் பிரதிநிதிகளும் எந்தவகையான அபிப்பிராயமும் சொல்லவில்லை. அவை இதில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்தன. புலிகள் இதைத் தமக்கான வசதியாகக் கருதி மெல்லமெல்ல தமது பிடியை இறுக்கி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தினர். சிறிலங்கா ராணுவம் மன்னார்மாவட்டத்திலிருந்து போரைத் தீவிரப்படுத்தி மெல்லமெல்ல வன்னி மையத்தை நோக்கி நகரத் தொடங்க, புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்பு மிகத் தீவிரமடையத் தொடங்கியது. ஏற்கனவே கிழக்கையும் அதன் தலைமைக்குரிய கருணாவையும் புலிகள் இழந்ததையும் நினைவிற் கொள்க.

புலிகள் எதிர்பார்த்திராத அளவுக்கு சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகள் அமைந்தன. மரபு வழியில் படைக் கட்டமைப்பையும் அதே வகையிலான தாக்குதல் மற்றும் படை நடவடிக்கைகளையும் குலையவிடக்கூடாது என்ற கவனத்தோடு புலிகள் செயல்பட்டனர்.

ஆனால் சிறிலங்கா ராணுவமோ மரபுவழி ராணுவமாக நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதும் அதன் ஒரு பிரதான அம்சமாக ஒரு முக்கிய அலகு கெரில்லா போர்முறையைப் பின்பற்றிப் புலிகளின் மீது நடவடிக்கைகளில் ஈடுபட்டது. புலிகளை நிலைகுலைய வைக்கும் தாக்குதல்களை சிறிலங்கா ராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணிகள் மிகக் கச்சிதமாக நடத்தின. இந்தத் தாக்குதல்களில் புலிகளின் முக்கியத் தளபதிகள் பலரும் கொல்லப்பட்டனர். இவ்வாறான ஒரு தாக்குதலின்போது புலிகளின் கொழும்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சார்ள்ஸ்என்பவர்(கேனல் சார்ள்ஸ்) மூன்று உதவியாளர்களுடன் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

வன்னியின் புவியியல் அமைப்பு (காடும் ஆறுகளும் பெருங்குளங்களும்) இராணுவத்துக்கு வாய்ப்பாகியது. புலிகள் தமது திறன் வாய்ந்த கெரில்லாப் போர்முறையை முழுதாகக் கைவிட்டு முற்று முழுதாக மரபுவழிப் போர்முறையைக் கையாண்டனர். இதேவேளை புலிகளின் கடல்வழி ஆயுத வருகையை - விநியோகத்தை, சிறிலங்கா விமானப் படையும் கடற்படையும் இணைந்து முழுமையாகத் தடுத்திருந்தன. புலிகளின் நான்கு ஆயுதக் கப்பல்கள் கடலில் தாக்கி அழிக்கப்பட்டிருந்தமை இங்கு நினைவுகொள்ளத்தக்கது. இதன் பின்னணியில் இந்தியாவும் அமெரிக்காவும் இருந்ததாக நம்பப்படுகிறது.

முக்கியமாக நான்காம் கட்ட ஈழப்போர் என்று வர்ணிக்கப்படும் இந்தக் காலகட்டப் போரில் புலிகளின் கடற்படை அல்லது கடற்புலிகளின் பலம் முற்றாகச் சிதைக்கப்பட்டது. அத்துடன் புலனாய்வுத் துறையும் அவர்களின் கரும்புலிகளின் அணியும் செயலற்ற நிலமைக்குத் தள்ளப்பட்டன.

கொழும்புநடவடிக்கைகளுக்கு இடமளிக்காமல் சிறிலங்கா அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டன. தவிர வன்னிக்கு வெளியே யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் சிறு அளவிலான ராணுவ நடவடிக்கைகளையோ அரசியல் செயல்பாடுகளையோ மேற்கொள்ள முடியாதவாறு சிறிலங்கா அரசின் புலனாய்வு நடவடிக்கைகளும் இறுக்கமும் இருந்தன. அத்துடன் கேனல் கருணா என்ற விநாயகமூர்த்தி முரளிதரனின் பிரிவோடு கிழக்கில் புலிகளின் ஆதிக்கமும் அதன் வழியான எல்லா வளங்களும் பாதிக்கப்பட்டன. குறிப்பாகப் புலிகளின் போருக்குக் கிழக்கு இளைஞர்கள் பெரும் பலமாக இருந்தனர். கருணாவின் பிரிவோடு இது தடைப்பட்டது.

இதேவேளை கடலையும் காட்டுப் பகுதியையும் மெல்ல மெல்ல தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் சிறிலங்கா ராணுவம் கொண்டுவந்தது. படைத்தரப்பு மன்னாரிலிருந்து நடவடிக்கையை மேற்கொண்டு வன்னி மேற்கின் காட்டுப் பகுதிகளையும் சிறுபட்டணங்களையும் முதலில் கைப்பற்றியது.

ராணுவ ரீதியில் புலிகளின் ஆயுதமும் கவசமும் - கடலும் காடுமே. மறுபுறத்தில் மக்கள். படைத்தரப்பின் போர் உத்தியாகக் காட்டையும் கடலையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததன் மூலம் புலிகளைப் பாதுகாப்பற்ற வெளிக்குள் தள்ளிவிட்டனர். இதனால் புலிகள் சனங்களை அரணாகப் பயன்படுத்தத் தொடங்கினர். புலிகளின் அழிவு என்பது இது போன்ற ஏனைய பல தவறான நடவடிக்கைகள் மூலம் ஏற்கனவே நிகழ்ந்திருந்தாலும் சனங்களைக் கட்டாயப்படுத்திப் போருக்கு இழுத்ததன் மூலம் மேலும் பாதகமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். சனங்களுக்கும் புலிகளுக்குமான முரண் ஒரு கட்டத்தில் உச்சநிலைக்குப் போய்விட்டது.

இதேவேளை படையினரின் முன்னேற்றம் தீவிரமடைந்து கொண்டேயிருந்தது. புலிகள் சேர்த்த பிள்ளைகள் (போராளிகள்) தொகை தொகையாகக் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தனர். ஊர்கள், தெருக்கள் எல்லாம் சாவை அறிவிக்கும் தோரணங்களாலும் சவ ஊர்வலங்களாலும் திணறின. மாவீரர் துயிலும் இல்லம் எல்லை கடந்து பெருத்தபடியே இருந்தன. சாவு ஒன்றுதான் நிச்சயமானதாக இருந்தது. சனங்கள் திகிலடைந்தனர். யுத்தம் மெல்ல மெல்லத் தீவிரமடைய இயல்பு வாழ்க்கை சிதைவடைந்தது. அகதிப் பெருக்கம், இடப்பெயர்வின் அவலம், சாவின் பெருக்கம் என நிலைமை மோசமான கட்டத்துள் வீழ்ந்தது.

தினமும் இடப்பெயர்வு, கிராமங்கள் பறிபோதல், சிறு பட்டிணங்கள் வீழ்ச்சியடைதல் என்பதே செய்தியாயிற்று. இடப் பெயர்வும் உயிரிழப்பும் மக்களை மிக மோசமாகத் தாக்கியது. மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்த இந்தச் சனங்கள் இடம் பெயர்ந்தபோது மிக மோசமான அவலத்திற்குள்ளானார்கள். போர் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்ததால் இவர்கள் ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து கொண்டேயிருந்தனர்.

இவர்கள் போகும் ஒவ்வொரு ஊரைத் தேடியும் படையினர் விரட்டத் தொடங்கினர். புலிகளின் இறுதி வீழ்ச்சி நடந்த இடமான புதுமாத்தளன் - முள்ளிவாய்க்கால் பகுதி வரையில் ஏறக்குறைய 20 தடவை வரை மன்னார் மக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றனர். இறுதிக் காலத்தில் ஒரு இடத்தில் ஐந்து நாட்கள், மூன்று நாட்கள் என்ற அளவிலேயே இருக்கக்கூடிய நிலை உருவானது. அந்த அளவுக்குப் படைத்தரப்பின் தாக்குதலும் படை நகர்வும் வேகமாக இருந்தன.

படையினரின் தாக்குதல்கள் அதிகரிக்கஅதிகரிக்கக்கொல்லப்படும் புலிகளின் தொகையும் அதிகரித்தது. புலிகள்தரப்பில்பின்னடைவுநிலையில் மூத்த புலிகளின் உறுப்பினர்களுக்கு அவநம்பிக்கையும், உளச்சோர்வும் ஏற்பட்டிருந்தன. ஆனாலும் தலைமையின் கட்டளைக்கு பணிந்து நடவடிக்கையை மேற்கொண்டாலும் படைத்தரப்பைச் சிதைக்கக்கூடிய மாதிரியோ அல்லது படைநகர்வை கட்டுப்படுத்தவோ தாமதப்படுத்தவோ கூடிய அளவுக்கு அவர்களின் தாக்குதல்கள் அமையவில்லை.

சனங்கள் எதுவுமே செய்ய முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். இடப்பெயர்வைச் சமாளிப்பதா? இராணுவத்தின் தாக்குதல்களில் இருந்து தப்பித்துக்கொள்வதா? பிள்ளைகளைக் காப்பாற்றுவதா என்று தெரியாத பேரவலம் ஒரு பெரும் சுமையாகச் சனங்களின் தலையில் இறங்கியது.

படைத் தரப்பின் தாக்குதல்களும் சனங்களை அச்சமடையவே வைத்தன. இதனால் கடந்த காலங்களில் சிங்கள இராணுவத்தின் தாக்குதல்களால் மிகவும் கசப்பான அனுபவத்தைப் பெற்றிருந்த சனங்கள் இன்னும் இன்னும் அச்சமடையத் தொடங்கி னார்கள். மன்னாரிலிருந்து சிறிலங்கா படையினர் தமது நடவடிக்கையை ஆரம்பித்து ஒன்றரை வருடமாக நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஏறக்குறைய இரண்டரை லட்சம் மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இந்தக் காலத்தில் மிக மூர்க்கமாக விமானத் தாக்குதல்கள் நடந்தன.



**தொடரும்...**

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஒரு இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்படுவோம். அது மாத்திரமல்ல, இன்னொரு சின்னத்தில் தேர்தலில் போட்டியிடவேண்டிய அவலநிலை எங்களுக்கு ஏற்படும். அதாவது அநாகரிகமான ஒரு நிலை ஏற்படும். பாரம்பரியமாக 1947ஆம் ஆண்டு தொடக்கம் வீடு என்று கூறப்படுகின்ற அதாவது முதன் முதலாக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு வந்த சிவபாலன் என்று கூறப்படுகின்றவரின் சின்னம் வீடாக இருந்தது. அது தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் சின்னமாக மாற்றப்பட்டது. அது பின்னர் இடையில் கூட்டணி உருவாக்கப்பட்டு சூரியன் சின்னமாக மாற்றப்பட்டது. அதன் பின்னர் ஏனைய கட்சிகள் இணைந்துகொண்டு கூட்டமைப்பு இருந்தது. கூட்டமைப்பு இருந்தபோதும் வீட்டுச் சின்னத்தில் கேட்கவேண்டி இருந்தது.

ஆனபடியால் இதற்கொரு சுமுகமான தீர்வு அவசரமாக காணப்படவேண்டும் என்பதில் எல்லா கட்சி ஆதரவாளர்களும், விசுவாசிகளும் எதிர்பார்ப்பார்கள் என்பதை நாம் நம்பவேண்டும். ஆகவே இதற்கு விரைவானதொரு முடிவு எட்டப்படவேண்டும்.

எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சியினுடைய தேர்தல் நடவடிக்கைகளை தடை செய்வதற்கான ஒரு நச்சுத்தன்மையான சூழ்ச்சியாக இது இருக்கலாம். அவ்வாறு இருக்கக்கூடாது. அவ்வாறிருந்தால் கட்சி ஒரு பேரழிவிற்கு உள்ளாகும் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் தான்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இயக்கப்படுகிறார். கருணா - பிரபா பிளவினை ரணில் விக்கிரமசிங்க அவர்கள் திட்டமிட்டு செயற்படுத்தியதைப்போன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் உடைக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியும் இன்று பிளவுபட்டுள்ளதற்கு சுமந்திரன் அவர்கள் தான் காரணம் என்கிற மாதிரியான கருத்துக்கள் சமூக ஊடகங்களில் உலவுகின்றது என்பதற்கு என்னால் பதில் கூறமுடியவில்லை. இது சம்பந்தமாக ஆக்கபூர்வமான, ஆழபூர்வமான கருத்துக்களை கூறமுடியாவிட்டாலும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் தென்னிலங்கையைச் சேர்ந்த கட்சிகளும் அதேபோல வடக்கில் இருக்கின்ற பல கட்சிகளும் தமிழரசுக் கட்சியினுடைய ஆதிக்கத்தையும் செல்வாக்கினையும் அதனுடைய பிரபல்யத்தையும் குறைக்கவேண்டும் என்கின்ற விடயத்தில் மிகக் கவனமாக செயற்பட்டு வருகின்றார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தவிடயம்.

உதாரணமாக, தென்னிலங்கையில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு சாபக்கேடான கட்சி என்றார். உண்மையில் தமிழரசுக் கட்சி 75 வருட கால அதனது வரலாற்றில் அது கடந்துவந்த பாதை, அது கடந்துவந்த நெருப்பாறுகள், அது கடந்துவந்த போராட்டங்கள். விடுதலைப்புலிகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கம் தமிழ்க் கட்சிகள் அனைத்திற்கும் ஒரு அரசியல் பலம் வேண்டும் என்கிற தீர்க்கதரிசனத்தின் அடிப்படையில் தான் உருவாக்கப்பட்டது.

ஆனால் நடந்தது என்னவென்றால் இடையில் அந்தக் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகள் காரணமாக பிரிந்துபோனார்கள். இந்தப் பிரிவுக்கும் சிலரைக் காரணமாகக் கூறுகின்றார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரிந்தார், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆனந்த சங்கரி ஐயா பிரிந்தார். ஈ.பி.டி.பி, ஈ.என்.டி.எல்.எப், சித்தார்த்தனுடைய புளொட் கட்சியோ இவையனைத்தும் இன்று எட்ட நிற்கின்ற கட்சிகளாவே காணப்படுகின்றது.

இன்று நாங்கள் தமிழரசுக் கட்சியை அழைக்கின்றோம், ஆதரிக்கின்றோம் என்று ஒரு மாற்றமான நிலை உருவாகியிருப்பது என்கிற விடயம் கவலைக்குரியது. இருந்தபோதிலும் வரலாற்று ரீதியாக எங்களுக்குத் தெரியும் வல்லாதி வல்லர்கள் நியாயமான தலைசிறந்த தலைவர்களால் வளர்க்கப்பட்ட ஒரு கட்சி. அந்தக் கட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கிறார்கள், போராட்ட வீரர்கள் இருந்திருக்கிறார்கள். வைத்தியர்கள் இருந்திருக்கின்றார்கள். அவ்வாறானவர்களால் வளர்க்கப்பட்ட ஒரு கட்சியை விளையாட்டாக எண்ணி ஓரங்கட்டுவது என்பது பொருத்தமில்லாத விடயம். ஒரு நிலையான வாக்கு வங்கி கொண்ட ஒரு நிலையான செல்வாக்கு கொண்ட கட்சி இலங்கை தமிழரசுக் கட்சி. அந்தக் கட்சியினுடைய செயற்பாடு இல்லாமல் தமிழ் மக்களுக்கான எந்தவொரு விடயதானத்தையும், எந்தவொரு தீர்வையும் அது அரசியல் தீர்வாக இருக்கலாம், பொருளாதார அபிவிருத்தியாக இருக்கலாம், கலாச்சார மாற்றங்களாக இருக்கலாம். இந்தக் கட்சியை தவிர்த்துக்கொண்டு ஏனைய கட்சிகள் கொந்தளிக்கின்றோம் என்று கூறுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

என்னைப் பொறுத்தளவில் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் கட்சியில் இருக்கின்றார்கள். அதுமாத்திரமல்ல தமிழரசுக் கட்சிக்காக தங்களை தங்களுடைய குடும்பங்களை தங்களுடைய பொருளாதாரங்களையும் தியாகம் செய்த பலர் வடகிழக்கில் இருக்கிறார்கள், வடகிழக்கிற்கு வெளியில் இருக்கின்றார்கள். புலம்பெயர்ந்த தேசங்களில் இருக்கின்றார்கள். இவர்கள் எல்லோரும்ஒன்றிணைந்துஇப்போதுஏற்பட்டிருக்கின்ற இந்த முரண்பாடுகளுக்கு ஒரு தீர்க்கமான நல்ல முடிவைக் கொண்டு வருவதற்கு அவர்கள் ஆலோசனை வழங்கி, ஏற்பட்டிருக்கிற தற்காலிக முறிவுகள் உலகத்தில் பல கட்சிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் இருக்கிற காங்கிரஸ் கட்சிக்கு நடந்திருக்கிற விடயமா நடந்திருக்கிறது. பாகிஸ்தானில் இருக்கிற கட்சிகள், இங்கிலாந்தில் இருக்கிற பல கட்சிகள், ஐரோப்பிய நாடுகளில் உள்ள கட்சிகள் என அனைத்து நாட்டினது கட்சிகளுக்குள்ளும் முரண்பாடுகள் வரும். முரண்பாடுகள் என்பது அடுத்த கட்டத்திற்கான வழிகாட்டுதல் என கூறியிருக்கிறார் கார்ல் மாக்ஸ் அவர்கள்.

அந்த வகையில் எங்களை விட தலைசிறந்த மூத்தவர்கள் இருக்கிறார்கள். தலைசிறந்த அறிஞர்கள் இருக்கிறார்கள். பேராசிரியர்கள், அரசியல் வல்லுனர்கள், ஆய்வாளர்கள், அதிபர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் இணைந்து இந்த முரண்பாட்டிற்கு இணக்கப்பாட்டை கொண்டுவருவதற்கு முனைவார்களாக இருந்தால் மிகக் குறுகிய காலத்தில் நாங்கள் மிக நல்ல முடிவுகளை எடுக்க முடியும்.

# நெடுந்தீவின் வரலாற்று தொன்மையும் சுற்றுலாத்துறையும்



இலங்கையின் சிகரமென விளங்கும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்கே காணப்படும் சப்த தீவுகளில் ஒன்றாய், ஆழ்ந்த அலைகடல்களின் மத்தியில் முத்தென விளங்குவது பசுத்தீவெனும் நெடுந்தீவாகும். இத்தீவு யாழ்ப்பாணத்திற்கு தென் மேற்கே 45KM மீற்றர் தொலைவிலும், குறிகட்டுவான் துறைமுகத்திலிருந்து 7 KM தூரத்திலும், தென் இந்தியாவிலுள்ள இராமேஸ்வரத்தில் இருந்து 38KM தூரத்திலும் அமைந்துள்ளது. இத் தீவானது கிழக்கு மேற்காக 8KM நீளமும், வடக்குத் தெற்காக 6KM அகலமும் உடையதாய் சுமார் 48 KM சதுர பரப்பளவைக் கொண்ட பிரதேசமாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் போலவே 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்டுள்ள இத்தீவு பசுத்தீவு, அபிஷேகத் தீவு, மருத்துவ மாவனம், புட்கரம், நெடுந்தீவு, டெல்வ்ற் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இவை யாவும் காரணப் பெயர்களாகும். ஆதிகாலத்தில் பசுக்கள் நிறைந்து காணப்பட்டமையாலும், பாற்பண்ணைத் தொழில் நன்கு விருத்தியுற்றிருந்தமையாலும், இத்தீவு பசுத்தீவென்று அழைக்கப்பட்டது. போர்த்துக்கீசர் ஆட்சிக்காலம் வரை இப்பெயராலேயே அழைக்கப்பட்டு வந்துள்ளமை அறியப்பட்டுள்ளது.

போர்த்துக்கீசரும், தமது மொழியில் இல்காஸ் டாஸ் வாகாஸ் என அழைத்தனர். பசுத்தீவு என்னும் பெயர் இப்பகுதியின் தரைத் தன்மையையும், மக்களின் பொருண்மிய நடவடிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு வழக்குப் பெற்றதாகும். இத்தீவின் கிழக்குப் பகுதியும், தென் பகுதியும் பரந்த புல்நிலங்களாக அமைந்தமையாலும், மந்தைகள் மேய்வதற்குப் பெரிதும் பயன்பட்டமையாலும் இத்தீவுக்குப் பசுத்தீவு என்ற பெயர் ஏற்பட்டதென இடப்பெயர் ஆய்வாளர் பேராசிரியர் இ.பாலசுந்தரம் கூறுவது பொருத்தமாகிறது. இங்கிருந்து பால், தயிர், இளநீர் ஆகிய அபிஷேகத் திரவியங்கள் தென் இந்தியாவிலுள்ள இராமேஸ்வரர் ஆலயத்திற்கு லிங்கேஸ்வரப் பெருமானின் அபிஷேகத்திற்காகக் கொண்டு செல்லப்பட்டு வந்தமையால், அபிஷேகத் தீவு என அழைக்கப்பட்டு வந்தது.

இராம இராவண யுத்த காலத்தில் மயக்க முற்றிருந்த தமது வீரர்களைக் காப்பாற்றுவதற்காக, அனுமன் இந்தியாவிலுள்ள சஞ்சீவி மலையொன்றினைப் பெயர்த்தெடுத்து தொழில் சுமந்துகொண்டு ஆகாய மார்க்கமாகப் பாக்குத் தொடுகடலைக் கடந்து இலங்கைக்கு வரும் பொழுது அம்மலையின் சிறு பகுதி உடைந்து பாக்குத் தொடுகடலில் வீழ்ந்துவிட்டதென்றும், மூலிகைகள் நிறைந்து காணப்படும் அப்பகுதியே நெடுந்தீவென்றும் கூறப்படுகிறது.

இங்கு அனேக நோய் தீர்க்கும் மூலிகைகள் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. இன்றும் இங்கு பொற்சீந்தில், சாறணை, மிசிட்டை, பிரண்டை, வீணாலை போன்ற பல மூலிகைகள் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் வைத்தியத் தொழிலில் புகழ்பெற்ற வைத்திய இராஜசிங்கன் என்ற பட்டப்பெயரைப் பெற்றவனான செகராசசேகரன் என்னும் யாழ்ப்பாண மன்னன் பசுத்தீவை மருத்துவ மாவனம் எனக் குறிப்பிட்டதாக யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கள மக்கள் இக்கருத்தில் அவுசத லோகய என்று அழைத்தார்கள். இதன் கருத்து சஞ்சீவி உலகமென்பதாகும். இங்கு மூலிகைகள் நிறைந்து காணப்பட்டதாலும், அவற்றை அங்கு வாழ்ந்த மக்கள் முற்காலங்களில் உண்டு வந்ததாலுமே நீண்ட ஆயுள் உள்ளவர்களாகவும், வயோதிப காலங்களிலும், தலைமயிர் நரை விழாமலும், உதிராமலும், பற்கள் விழாமலும் உடல் திடகாத்திரம் உள்ளவர்களாகவும், நூறு தொடக்கம் நூற்றி இருபத்தைந்து வயதுக்கு மேல் வாழ்ந்துள்ளார்கள் எனவும் அறியக்கிடக்கின்றது. இங்குள்ள மக்கள் நான்கு தலைமுறைகளுக்கு மேலாக வாழ்ந்தார்களென்பதற்கான ஒரு கதையுண்டு.

நெடுந்தீவு மந்தை வளர்ப்புக்கேற்ற இயற்கை வளம் கொண்டது. இங்கு சில மக்கள் பட்டி பட்டியாக ஆடு வளர்ப்பதை ஒரு பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். ஆடுகள் வாங்குவதற்காக வியாபாரிகள், இங்கு காலத்திற்குக் காலம் வருவார்கள். மேய்ச்சல் நிலங்களில் மந்தைகள் மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்ட வியாபாரிகள் மேய்த்துக் கொண்டிருக்கும் இளைஞனை அணுகி, விற்க ஆடு உண்டா எனக் கேட்டால் இளைஞன் மறு மொழியாக ஆம் உண்டு, ஆனால் அப்புவிடம் கேட்கவேண்டும் எனக் கூறி அப்புவிடம் அழைத்துச் செல்வான். அப்பு தூரத்தே வேப்பமர நிழலில் உட்கார்ந்திருப்பார். அப்புவிடம் வியாபாரி ஆடு விற்க உண்டா எனக் கேட்பார். அவரும் மறுமொழியாக ஆடு விற்க உண்டு எனக்கூறி, எழுந்து அப்புவிடம் கேட்போம் என வீட்டிற்குள் போவார். அப்பு வெளியில் சாய்வு நாற்காலியில் படுத்திருப்பார். அவரும் அப்புவிடம் கேட்போம் என உள்ளே செல்வார். அங்கே அப்பு உறிபோன்ற ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருப்பார். அவரிடம் போய் அனுமதி பெற்று வருவார். இவ்வாறு அநேக குடும்பங்கள் நான்கு தலைமுறையாக வாழ்ந்ததாகவும் சில குடும்பங்கள் ஐந்து தலைமுறையாக வாழ்ந்ததாகவும் அறியப்படுகிறது.

புராண காவியங்களிலும், இலக்கியங்களிலும் இத்தீவு அதிக தொடர்புடையதாக விளங்கியதென்றும் புட்கரம் என்பது நெடுந்தீவையே குறிப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். இத்தீவானது யாழ்க்குடா நாட்டிலிருந்து நெடுந்தொலைவில் இருப்பதால் நெடுந்தீவு என்று அழைக்கப்பட்டது. இன்றும் தமிழில் இத்தீவு நெடுந்தீவு என்றே அழைக்கப்பட்டு வருகிறது. டெல்வ்ற் என்ற பெயர் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் அவர்களாலே பசுத்தீவிற்குச் சூட்டப்பட்ட பெயராகும்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் எல்லாத் தீவுகளுக்கும், தங்கள் நாட்டில் காணப்பட்ட இடங்களின் பெயர்களைச் சூட்டினார்கள். நெடுந்தீவிற்கும் தங்கள் நாட்டிலுள்ள ஒரு பாற்பண்ணை நகரின் பெயரான டெல்வ்ற் என்ற பெயரைச் சூட்டினார்கள். டெல்வ்ற் என்ற இப் பெயராலேயே இன்றும் இத்தீவு அழைக்கப்பட்டு வருகிறது.

தொடரும்...

தொகுப்பு - Kanthasamy Kirikaran

# நாட்டு நலனுக்காக பொதுவான ஒருமித்த கருத்துடன் இணையுங்கள்!



கடந்தவாரத் தொடர்ச்சி...

இந்த ஆண்டு அஸ்வெசும ஊடாக 24 லட்சம் பேருக்கு நன்மைகள் அளிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் நாட்டின் கீழ் மட்டத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். நமது நாட்டின் வரலாற்றில் இவ்வளவு பெரிய தொகை நிதி மானியம் வழங்கப்படவில்லை. வரும் பண்டிகை காலத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தலா 20 கிலோ வீதம் அரிசி, நிவாரணமாக வழங்கப்படும். 2022 ஓகஸ்ட் மாதமளவில், ஜனாதிபதி நிதியம் முற்றிலும் செயலிழந்தது. 9,000இற்கும் மேற்பட்ட மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்கள், பணம் இல்லாமல் குவிந்திருந்தன. ஓகஸ்ட் முதல் டிசம்பர் வரை மேலும் 4,000 விண்ணப்பங்கள் வரை கிடைத்தன. அவை அனைத்திற்கும் பணம் செலுத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் 4,917 நோயாளர்களுக்கு 915 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.

தற்போது பணம் செலுத்துவதற்கு பல மாதங்கள் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. மூன்று அல்லது ஐந்து வேலை நாட்களுக்குள் பணம் செலுத்தும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அனைத்து மருத்துவ உதவிகளையும் 50 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த உதவித் தொகைகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்கு நாம் விசேட கொடுப்பனவு ஒன்றை வழங்கினோம். ஓய்வூதியம் பெறுவோரின் சம்பளத்தை உயர்த்தினோம். 2016 முதல் 2020 வரை ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு சம்பள முரண்பாடு உள்ளது. அந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கும் போது அதற்கு சமாந்தரமாக நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாம் அடைந்துவரும் வளர்ச்சி சமூகத்தில் பேசப்படும் தலைப்புகளில் பிரதிபலிக்கிறது. சில காலம் முன்பு மின் வெட்டினால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி பேசினோம். அப்போது, எவ்வளவு கொடுத்தாலும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. இன்று நாம் மின்சாரக் கட்டணத்தைப் பற்றி பேசுகிறோம். சில காலத்திற்கு முன்பு கறுப்பு சந்தையில் ஒரு லீட்டர் பெட்ரோல் 3000 ரூபாவிற்கு வாங்கப்பட்டது குறித்து பேசப்பட்டது. எரிபொருள் வரிசைகளில் மூன்று அல்லது நான்கு நாட்கள் செலவிடுவது பற்றி பேசப்பட்டது. இன்று நாம் இலங்கையில் முதலீடு செய்யும் புதிய எரிபொருள் நிறுவனங்கள் பற்றி பேசுகிறோம். காய்கறி வாங்க வழியில்லை என்று பேசிக்கொண்டனர். இன்று ஒரு கேரட்டின் விலை பற்றி பேசுகின்றனர். புத்தகம் அச்சடிக்க காகிதம் இருக்கவில்லை என்று அன்று கூறப்பட்டது. இன்று வற் வரி பற்றிப் பேசுகிறோம். ஆம். வற் வரி பலருக்கு சுமையாக உள்ளது. இந்தப் பிரச்சினையை நாம் உணராமல் இல்லை. அந்தப் பிரச்சினைக்கு நாம் படிப்படியாக தீர்வுகளை வழங்கி வருகிறோம். 2022 இல் 437,547 வரிக் கோப்புகள் இருந்தன. 2023 இறுதியில் வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 1,000,029 ஆக உயர்ந்துள்ளது. இது 130 சதவீத அதிகரிப்பு. வரி வலையமைப்பு விரிவடையும் போது, ஒரு தனிநபருக்கோ அல்லது ஒரு நிறுவனத்திற்கோ ஏற்படும் வரிச்சுமை குறையும். மேலும், நமது பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதைத் தொடரும்போது, பொருளாதாரம் ஸ்திரமாகும்போது, வரிச்சுமையைக் குறைப்போம். "வற்" வரியின் சதவீதத்தை திருத்துவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

மலையளவு கடனைச் சுமந்துகொண்டுதான் இதையெல்லாம் செய்கிறோம். கடந்த காலம் முழுவதும் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும் முறை குறித்து மீள் திட்டத்தைத் தயாரிப்பதில் நாங்கள் கடுமையாக உழைத்து வந்தோம். முதல் கட்டமாக, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் நிறைவடைந்துள்ளது. இரண்டாவது கட்டமாக, வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடன் மறுசீரமைப்பு தொடர்பான கொள்கை ரீதியான உடன்பாடு எட்டப்பட்டது. தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இந்த சிக்கலான மறுசீரமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம். இது நமது பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான அடிப்படையாக அமையும். மேலும் கடன் அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கான பாதையின் மையமாக இது மாறிவிட்டது. IMF, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை இந்த ஆண்டு 2% முதல் 3% பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்று கணித்துள்ளன. 2025இல் அதை 5 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். 2021 ஆம் ஆண்டில், தீயில் விழுந்திருந்த நாட்டை மீட்பதற்கான பணிகளை நாம் ஆரம்பித்தோம். 2021 ஐ விட சில விடயங்களை 2022ஆம் ஆண்டு மேம்படுத்திக் கொண்டோம். 2022 ஐ விட 2023 எல்லா வகையிலும் மேம்படுத்திக் கொண்டோம். 2024. இது இன்னும் சிறப்பாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதையில் நாம் தொடர்ந்து பயணித்தால், 2025 இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஆனால் அதில் மாத்திரம் திருப்தி அடைய முடியுமா? வெளிநாடுகள் மற்றும் வெளி வணிக தளங்களில் இருந்து பெற்ற எந்த கடனையும் நாங்கள் இன்னும் செலுத்தவில்லை. ஆனால் மறுசீரமைப்புக்குப் பிறகு நாம் கடனைச் செலுத்தத் தொடங்க வேண்டும். கடனை மீளச் செலுத்த ரூபாவைப் போன்று டொலர்களும் எம்மிடம் இருக்க வேண்டும். 2023 செப்டெம்பர் மாத மளவில் மொத்தக் கடன் 91 பில்லியன் டொலர்களாக காணப்பட்டது. இந்த கடன்களை செலுத்த நீண்ட காலம் அவசியப்படும். அதற்காக நாம் தேசிய மட்டத்தில் வருமானம் ஈட்ட வேண்டும். இல்லாவிட்டால் நாம் மீண்டும் கடன் பிடிக்குள் சிக்கிக்கொள்வோம். கடன் மறுசீரமைப்பு காரணமாக வருடமொன்றிற்காக நாம் செலுத்த வேண்டிய தொகையை குறைத்துக்கொள்ள முடியும். ஆனாலும் நாம் வருடத்திற்கு 3 பில்லியன் டொலர்கள் வரையில் செலுத்த வேண்டியிருக்கும். இவ்வாறு தொடர்ந்து கடனில் சிக்கியிருக்க முடியாது. அதேபோல் கடன் பெறவும் முடியாது. அதேபோல் எமது வரவு செலவுக்கு இடையிலான சமநிலையை உருவாக்குவதற்கான துரித முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எமது வரவு செலவு திட்ட துண்டுவிழும் தொகை பாரதூரமானது. இவ்வருடத்தில் 4,127 பில்லியன்களை அரசாங்கம் வருமானமாக ஈட்டியிருந்தாலும் அரசாங்கத்தின் செலவு 6,978 பில்லியன்களாக உள்ளது. அவற்றில் 2,651 பில்லியன்கள் கடனுக்கான வட்டியாக செலுத்துவதற்காகவே செலவிடப்படுகிறது. இதன்மூலம் எங்களின் கடன் சுமையை உணர முடியும்.

1950 ஆம் ஆண்டுக்குப் பிறகு, நாங்கள் தொடர்ந்து கடன் வாங்கிவந்துள்ளோம். எல்லாவற்றுக்கும் கடன் வாங்கியுள்ளோம். ஆட்சியாளர்களும் கடன் வாங்கப் பழகினர். மக்களும் இந்தக் கடன் பொருளாதாரத்துக்கு ஏற்றாற்போல் இசைவாக்கமடைந்தனர். அரிசி இலவசமாக வழங்கப்படும், மின் கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்படும். சம்பளம் அதிகரிக்கப்படும், இலட்சக்கணக்கில் அரச வேலை வாய்ப்புகள் வழங்கப்படும். இவ்வாறான தேர்தல் வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்ததும் அவை கடன் பெற்று நிறைவேற்றப்பட்டன. இந்தக் கடன் மனப்பான்மையில் இருந்து விடுபட வேண்டும். கடன் பொருளாதாரத்தில் இருந்து விடுபடாவிட்டால் இந்த நாட்டிற்கு எதிர்காலம் இல்லை. எதிர்காலம் ஒன்று இல்லாமல் போகும். எனவே கடன் பொருளாதாரத்தில் இருந்து விடுபட்டு நமக்கான வலுவான பொருளாதாரத்தை உருவாக்க பாடுபட வேண்டும்.

இவற்றை அடைவதற்கு ஏற்றுமதி வருமானத்தையும், வெளிநாட்டு முதலீடுகளையும் விரைவாக அதிகரிப்பது இன்றியமையாதது. அதற்குத் தேவையான அடித்தளத்தை அமைத்து, பல பொருளாதார சீர்திருத்தங்களை தற்போது செயல்படுத்தி வருகிறோம். போட்டிப் பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது பிரதான எதிர்பார்ப்பாகும். அதேபோல் டிஜிட்டல் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரத்தையும் உருவாக்க எதிர்பார்க்கிறோம். ஊழலை ஒழித்தல் மற்றும் சமூக நவீன மயமாக்கல் என்பனவே இந்த செயல்முறையின் முக்கிய அம்சங்களாகும். இந்த நாட்டில் ஊழல் ஒரு சாபக்கேடாக மாறிவிட்டது என்பதை பலரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், முறைமையான சட்ட விதிகளால் மாத்திரமே ஊழலை ஒழிக்க முடியும் என்பதை பலர் உணரவில்லை. திருடர்களைப் பிடியுங்கள் என்று கூச்சல் போடுவதால் மாத்திரம் திருடர்களைப் பிடிக்க முடியாது. திருடர்களைப் பிடிப்பதற்கு, வலுவான சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் அறிவியல் முறைகள் தேவை. அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய பயிற்சி பெற்ற அதிகாரிகளும் தேவை. ஊழல்வாதிகளை நீதியின் முன் நிறுத்தினால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று பலர் நினைக்கிறார்கள். இது ஒரு மாயை. ஊழலைத் தடுக்கவும் கடுமையான சட்ட விதிமுறைகளை உருவாக்க வேண்டும். மேலும் ஊழல்வாதிகள் கடுமையாக தண்டிக்கப்படவேண்டும். ஊழலை ஒழிக்க இந்த இரண்டு விடயங்களும் ஒன்றாக செயல்படுத்தப்பட வேண்டும். அதற்காக, ஊழல் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றினோம். தற்போது சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. அத்தகைய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நாங்கள் ஒருபோதும் அரசியல் அல்லது பிற அழுத்தங்களைப் பிரயோகிக்க மாட்டோம். அது தற்போது நாட்டின் முன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார மற்றும் சமூக நவீனமயமாக்கலில் நாம் கவனம் செலுத்தும் சில முக்கிய விடயங்கள் குறித்தும் இந்த கௌரவ சபைக்கு வலியுறுத்த விரும்புகிறேன். சுற்றுலாத்துறையை எம்மால் எளிதாக அபிவிருத்தி செய்ய முடியும். அந்தத் துறையில் முன்னேற்றத்திற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்தவும், நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை வருடத்திற்கு 05 மில்லியனாக அதிகரிப்பதே எமது எதிர்பார்ப்பாகும். நமது நாடு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்கள் நிறைந்த நாடு. அந்த வாய்ப்பை நாம் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சர்வதேச தொழில்நுட்பத்தைப் பெற்று, நம் நாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்தால், வலுசக்தி ஏற்றுமதி செய்யும் நாடாக அந்நியச் செலாவணியைப் பெறலாம்.

பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அமோனியா உற்பத்தியில் நாம் உயர்ந்த நிலையை அடைய வாய்ப்பு உள்ளது. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஆரம்ப கட்டத் திட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன. காலநிலை மாற்றம் குறித்து நாம் ஏற்கனவே கவனம் செலுத்தி வருகிறோம். இது தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக, இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த காலத்தில் இருந்து தற்போது வரை விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறோம். பயிரிடுகின்றோம். ஆனால் இன்னும் காலாவதியான முறைகளையே பின்பற்றி வருகிறோம். பல தசாப்தங்களாக எந்த விவசாய நவீனமயமாக்கல் பணிகளையும் நாங்கள் முன்னெடுக்கவில்லை.

தொடரும்...

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு**

# பெண்களுக்கு அதிகமாக ஏற்படும் "இரத்தச் சோகை" நோய்



(பைஷல் இஸ்மாயில்)

**இரத்தச் சோகை என்பது என்ன?**

ஒருவருக்கு இரத்தச் சோகை நோய் ஏற்பட பல்வேறு காரணங்கள் உண்டு. அதில் மிகவும் முக்கியமானது இரும்புச் சத்து குறைவினால் ஏற்படும் இரத்தச் சோகையாகும்.

**இது பெண்களுக்கு ஏன் அதிகமாக ஏற்படுகிறது?**

ஆண்களை விட பெண்களுக்கே அதிகமாக இந்நோய் ஏற்படும். ஏனெனில், பெண்களுக்கு பல்வேறு நிலைகளில் "இரும்புச்சத்து" அதிகமாக தேவைப்படும். அவர்கள் வளரும் பருவத்தில், பூப்படையும் பருவத்தில், கர்ப்பிணியாய் இருக்கின்ற பருவத்தில், பாலூட்டும் பருவத்தில் என பல்வேறு பருவத்திலும் அவர்களுக்கு இரும்புச்சத்து அதிகமாக தேவைப்படுகிறது.

இவ்வாறு தேவைப்படுகின்றபோது போதுமானளவு இரும்புச்சத்து கிடைக்காவிட்டால் "இரும்புச்சத்து குறைவினால்" இரத்தச் சோகை நோய் ஏற்படுகிறது.

**ஹீமோகுளோபீனின் அளவு என்ன?**

பெண்களுக்கு குறைந்தபட்சம் 14.5 கிராம் சதவிகிதம் அளவிற்காவது "ஹீமோகுளோபீனின்" அளவு இருக்க வேண்டும். பெரும்பாலான, பெண்களுக்கு "ஹீமோகுளோபீனின்" அளவு 10 கிராம் சதவிகிதம் இரும்புச் சத்து அளவிற்கும் குறைவாகவே இருக்கும்.

**இரத்தச் சோகை ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

சிலருக்கு, குடலில் "கொக்கி புழுக்கள், பிற புழுக்கள் (சிஸ்டோ சோமியாஸிஸ்) அதிகமாக இருந்தாலும் இரும்புச்சத்து குறைபாடு காரணமாக இரத்தச் சோகை நோய் ஏற்படும்.

மாதவிடாய் காலத்தில் அதிகப்படியான "இரத்தப்போக்கு" அதிகமாவதனாலும் "இரத்தச் சோகை" நோய் ஏற்படும்.

பாலூட்டும் நிலையிலும், போதுமான உணவு உண்ணவில்லை என்றாலும், உணவுச் சத்துக்களின் பற்றாக் குறையினாலும் இரத்தச் சோகை ஏற்படலாம்.

மாதவிடாய் செல்லுகின்ற காலத்தில் பெண்ணிற்கு மாதந்தோறும் இரத்த இழப்பின் அளவு இருக்கும். அதில் 30 மி.கி. அளவு இரும்புச் சத்து வீணாகிவிடும்.

கர்ப்பிணிகளுக்கு, இரத்தப்போக்கு ஏற்படவில்லையென்றபோதும், வளரும் சிசுவிற்கு அதிகமான அளவு இரும்புச் சத்து தேவைப்படுவதால், இவர்களுக்கும் இரத்தச் சோகை ஏற்பட்டுவிடும்.

வயதான பெண்களுக்கும், மாதவிடாய் நின்றவர்களுக்கும் குடல் பகுதியில் இரத்தக் கசிவு ஏற்படுவதால் "இரும்புச் சத்து குறைபாடு" உடைய "இரத்தச் சோகை" நோய் ஏற்படலாம். உடல் வலிக்கு பயன்படுகின்ற பல்வேறு மருந்துகளை எடுப்பதாலும், புற்றுநோயின் பாதிப்பினாலும், இரைப்பை, சிறுகுடல் புண்களினாலும் இவர்களுக்கு இரத்தக் கசிவு ஏற்படலாம்.

**இரும்புச் சத்து தேவையான அளவு என்ன?**

தினமும் சராசரியாக ஒருவருக்கு 2.5 மி.கி. அளவு இரும்புச் சத்து தேவைப்படுகிறது. மாதவிடாய் தோன்றும் காலங்களில் 1 மி.கி. அளவு அதிகமாக இரும்புச் சத்து தேவைப்படும். ஆகவே, மொத்தமாக, இப்பெண்களுக்கு தினமும் 3.5 மி.கி. அளவு இரும்புச் சத்து தேவைப்படும்.

**நோய் அறிகுறிகள் என்ன?**

பெரும்பாலானோருக்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் இருக்கும். மருத்துவ பரிசோதனையின்போது இவர்களுக்கு இரத்தச் சோகை இருப்பது தெரியவரும். பலருக்கு பொதுவான பல்வேறு உடல் பிரச்சினைகளும், உபாதைகளும் ஏற்படும்.

அசதி, உடல் தளர்வு, பலமின்மை, நெஞ்சு படபடப்பு, தலைவலி, மயக்கம், தலைசுற்றல், பார்வை மங்கல், உறக்கமின்மை, நெஞ்சு வலி, கை, கால், விரல்கள் மரத்து போதல், சுவாச முட்டல் போன்ற அறிகுறிகள் ஏற்படும்.

தோல் வெளுத்துப்போதல், இதயத் துடிப்பும் இவர்களுக்கு அதிகமாக இருக்கும். காலில் வீக்கம் ஏற்பட்டிருக்கும்.

மேலும், வாயின் ஓரப்பகுதியில் வெடிப்புத் தோன்றி, பாதிக்கப்பட்டு "புண்கள்" போல காட்சியளிக்கும். நாக்குப் பகுதியிலும் புண்கள் தோன்றலாம். வீக்கமும், வலியும் ஏற்படலாம். நகத்தில் வெடிப்புகள் தோன்றியிருக்கும். சிலருக்கு நகம் தட்டையாக இருக்கலாம். வளைந்து, உட்குழிந்தும் காணப்படலாம்.

சிலருக்கு உணவு விழுங்குவதில் கஷ்டமிருக்கும். பலருக்கும் உணவு, சாதாரணமாக சாப்பிடக்கூடிய பிற உணவுகளை விட, களிமண், மணல், சாம்பல் ஆகியவற்றை சாப்பிடுவது மிகவும் பிடிக்கும்.

சிலர் தக்காளி / மிகவும் பச்சையாக உள்ள காய்கறிகளை சாப்பிட விரும்புவார்கள். இவ்வாறான நிலை, இரத்தச் சோகை இருக்கின்ற



நேரத்தில் அதிகமாக ஏற்படும். சிலருக்கு "மண்ணீரல்" அதிகமாக வீங்கி விடும். இரத்தச்சோகை அதிகமாக இருக்கும்போது இதய செயலிழப்பும் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

**இந்நோயினை கண்டறியும் பரிசோதனைகள் என்ன?**

இரத்த பரிசோதனையின் மூலம் கண்டறியலாம். அவ்வாறு பார்க்கின்றபோது இவர்களின் "ஹீமோகுளோபீன்" அளவு மிகவும் குறைவாக இருக்கும். சிவப்பணுக்கள் அளவில் சிறியவையாக இருப்பதுடன், வெளிறியும் காணப்படும்.

நீள்வட்ட செல்களும் காணப்படும். சிவப்பணுக்களின் எண்ணிக்கை சிறிது குறைவாக இருக்கலாம். எம்.ஸி.வி. எனப்படும் "மொத்த செல்களின் அளவு" குறைவாக இருக்கும்.

வெள்ளையணுக்கள் எப்போதும் போல சாதாரணமாக காணப்படும். சில வெள்ளையணுக்களில் மையக்கரு பல பிரிவுகளாக பிளவுபட்டிருக்கும்.

இரத்த சிவப்பணுக்களில் படியும் தன்மை (ஈ.எஸ்.ஆர்.) எதிர்பார்த்ததை விட குறைவாகவே இருக்கும். எலும்பு மஜ்ஜையில் இரும்புச் சத்தின் குறைபாடு காணப்படும். இரத்தத்தில் "இரும்புச் சத்தின்" அளவு மிகவும் குறைவாக இருக்கும். "இரும்புச் சத்து சேரும் தன்மை" அதிகரித்திருக்கும்.

ஆய்வுகூட பரிசோதனைகளின் மூலம் இரும்புச் சத்து குறைபாட்டினால் இரத்தச் சோகை ஏற்பட்டுள்ளது என்பதனை அறிந்து கொள்ளலாம். மேலும், நோயாளி செல்லும் குறி குணங்களில் இருந்தும் வயதை வைத்தும் கண்டுபிடித்து விடலாம்.

குறிப்பாக, இவர்களுக்கு குடலில் இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளதா என்ற பரிசோதனை செய்வது அவசியமாகும். மலத்தில் "இரத்தம்" உள்ளதா? என்பதனையும் கண்டறிவது அவசியமாகும். இதற்கென பிரத்தியேக பரிசோதனைகள் உள்ளன. கதிரியக்க சக்தி கொண்ட "குரோமியம்" சேர்க்கப்பட்ட சிவப்பணு செல்களை செலுத்தி, அவை எவ்வளவு குடலின் மூலம் வெளியேறுகின்றன என்பதனை கண்டறியும் பரிசோதனையும் உள்ளது.

மல பரிசோதனையில் கிருமிகள், புழுக்களின் முட்டைகள் உள்ளனவா? என்பதனையும் கண்டறிய வேண்டும். "செயற்கை வால்வு" பொருத்தியவர்களுக்கும் இதுபோன்ற இரத்தச் சோகை ஏற்படலாம்.

**இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

பெண்களுக்கு இடைவிடாமல் அடிக்கடி மாதவிடாய் போவதும், அதிகளவில் போவதும் மிகவும் முக்கியமான காரணங்களாகும். அடிக்கடி கர்ப்பிணியாகி, குழந்தை பெறுவதும் ஒரு முக்கியமான காரணமாகும்.

**சிகிச்சைகள் என்ன?**

இரத்தச் சோகை நோயை குணப்படுத்த முன்னர், இந்நோய் என்ன காரணத்தினால் உண்டானது என்பதனை கண்டறிய வேண்டும். அதனை போக்கினாலேயே நோயும் சரியாகிவிடும்.

வயிற்றில் கொக்கி புழுக்களின் பிரச்சினை இருந்தால் அவற்றை அழிப்பதற்கான மருந்துகளை எடுத்துக் கொள்ளவேண்டும். மாதவிடாய் பிரச்சினைக்கு உரிய பரிசோதனைகள் செய்து சிகிச்சை செய்யவேண்டும். அடிக்கடி கர்ப்பிணியாவதை தவிர்க்க வேண்டும். குடற்புண்கள், கட்டிகள், புற்றுநோய்கள் ஆகியவற்றிற்குரிய சிகிச்சைகளும் அவசியமாகும்.

**இந்நோயின் பாதிப்பிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்வது எவ்வாறு?**

இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை அதிகமாக எடுக்கவேண்டும். குறிப்பாக, பேரிச்சம்பழம், முருங்கை கீரை, பப்பாளிப் பழம், கல்லீரல், இறைச்சி ஆகியவற்றை இவர்கள் அதிகமாக சாப்பிட்டால் இந்நோயிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

**டாக்டர் முத்துச் செல்லக்குமார்.**
MD (Gen.Medi.)

# விளையாட்டுச் செய்திகள்

## மின்னல் தாக்கி உயிரிழந்த வீரர்



இந்தோனேசியாவில் நடைபெற்ற கால்பந்து போட்டியின் போது மின்னல் தாக்கியதில் வீரர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு ஜாவாவின் பாண்டுங்கில் உள்ள சிலி வாங்கி மைதானத்தில் (11-02-2024) FLO FC பாண்டுங் மற்றும் FBI சுபாங் அணிகளுக்கு இடையே கால்பந்து போட்டி நடைபெற்றது.

குறித்த இந்த போட்டி நடந்து கொண்டிருக்கும் போது கால்பந்து வீரர் ஒருவர் மீது திடீரென மின்னல் தாக்கியதில் சுருண்டு விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேலும் இச்சம்பவத்தில் 35 வயது வீரர் ஒருவரே உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் சக வீரர்களை அதிர்ச்சியிலும் சோகத்திலும் ஆழ்த்தியுள்ளது.

## சாதனையை தகர்த்த கேன் வில்லியம்சன்



தென் ஆபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் வில்லியம்சன் சாதனை சதம் விளாசினார். ஹாமில்டனில் நியூசிலாந்து மற்றும் தென் ஆபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் நடந்தது.

முதல் இன்னிங்சில் தென் ஆபிரிக்கா 242 ஓட்டங்களும், நியூசிலாந்து 211 ஓட்டங்களும் எடுத்தன. பின்னர் இரண்டாவது இன்னிங்சை ஆடிய தென் ஆபிரிக்கா 235 ஓட்டங்கள் எடுத்து அவுட் ஆனது. இதன் மூலம் நியூசிலாந்து அணிக்கு 267 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய நியூசிலாந்து அணியில் தொடக்க வீரர்கள் கான்வே 17 ஓட்டங்களும், டாம் லாதம் 30 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். ஆனால் கேன் வில்லியம்சன் மற்றும் வில் யங் பார்ட்னர்ஷிப் அமைத்து அணியை வெற்றி பெற வைத்தனர். வில்லியம்சன் 133 ஓட்டங்களும், வில் யங் 60 ஓட்டங்களும் விளாசினர். கேன் வில்லியம்சன் அடித்த 32வது சதம் இதுவாகும். இதன் மூலம் அவர் இமாலய சாதனை படைத்தார். குறைந்த இன்னிங்சில் 32 டெஸ்ட் சதங்கள் என்ற ரிக்கி பொண்டிங், சச்சின் டெண்டுல்கரின் சாதனையை வில்லியம்சன் முறியடித்தார்.

பொண்டிங் 176 இன்னிங்சிலும், சச்சின் டெண்டுல்கர் 179 இன்னிங்சிலும் 32 சதங்களை எட்டிய நிலையில், வில்லியம்சன் 172 இன்னிங்சிலேயே இந்த சாதனையை செய்துள்ளார். இதற்கிடையில் நியூசிலாந்து அணி 2-0 என டெஸ்ட் தொடரை வென்று, 92 ஆண்டுகளுக்கு பின் தென் ஆபிரிக்காவை வீழ்த்தி சாதனை படைத்துள்ளது.

## கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற போபண்ணா



43 வயதில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ரோஹன் போபண்ணாவிற்கு கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா ரூ.50 லட்சம் பரிசுத்தொகை அறிவித்துள்ளார்.

இந்திய மாநிலமான கர்நாடகாவைச் சேர்ந்த டென்னிஸ் விளையாட்டு வீரர் ரோஹன் போபண்ணா. இவர், அண்மையில் நடந்த அவுஸ்திரேலிய ஓபன் ஆடவர் இரட்டையர் இறுதிப் போட்டியில், இத்தாலிய ஜோடியான சைமன் பொலேல்லி - ஆண்ட்ரியா வாவசோரியை வீழ்த்தி ரோஹன் போபண்ணா - மேத்யூ எப்டன் ஜோடி பட்டம் வென்றனர். இதனால், கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற மிக வயதான வீரர் என்ற சாதனையையும், ஆடவர் இரட்டையர் பிரிவில் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர் என்ற சாதனையையும் ரோஹன் போபண்ணா பெற்றார்.

இந்நிலையில், கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா ரோஹன் போபண்ணாவை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், தனது ட்விட்டர் எக்ஸ் தளத்தில், "அவுஸ்திரேலிய ஓபன் ஆடவர் இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்ற ரோஹன் போபண்ணாவை சந்தித்து வாழ்த்து தெரிவித்தேன். மேலும், அவரை கௌரவிக்கும் விதமாக ரூ.50 லட்சம் பரிசுத்தொகை அறிவித்துள்ளேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## வங்காளதேச கிரிக்கெட் அணிக்கு புதிய தலைவர்




வங்காளதேச கிரிக்கெட் அணியின் அனைத்து விதமாக போட்டிகளுக்கும் நஜ்முல் ஹொசைன் ஷாண்டோ Najmul Hossain Shanto புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், தேசிய அணியின் தலைமை தேர்வாளராக காசி அஷ்ரப் ஹொசைன்லிபுநியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, ஷகிப் அல் ஹசனுடன் பேசினோம். அவருக்கு கண் பிரச்சினைகள் இன்னும் சரியாகவில்லை. இல்லையெனில், எல்லா வடிவங்களிலும் கேப்டனாக இருப்பதற்கான எங்கள் முதல் தேர்வாக அவர் இருந்திருப்பார்.

மேலும், வீரர்களின் இருப்பைப் பொறுத்து துணை கேப்டன் பதவி தீர்மானிக்கப்படும், தொடருக்குத் தொடர் மாறுபடும் எனவும் வங்காளதேச கிரிக்கெட் பேரவை தெரிவித்துள்ளது.

## முடிவை அறிவித்தார் எம்பாப்பே



ஒப்பந்தம்முடிவுக்குவரும்நிலையில், அணியை விட்டு விலகுவதாக கைலியன் எம்பாப்பே பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி நிர்வாகம் புதிய ஒப்பந்தம் ஒன்றை முன்னெடுக்க முடிவு செய்துள்ளதாகவே கூறப்படுகிறது. PSG அணியில் கைலியன் எம்பாப்பே நீடிக்கவேண்டும் என்றே அதன் தலைவரான Nasser Al Khelaifi தெரிவித்துள்ளார்.

உலகத்தரம் வாய்ந்த வீரர் அவர். அவருக்கான சிறந்த அணி PSG மட்டுமே என Nasser Al Khelaifi கடந்த மாதம் தெரிவித்திருந்தார். இருப்பினும், பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி நிர்வாகத்திடம் இறுதியில் தமது முடிவை எம்பாப்பே தெரிவித்துள்ளதாகவே கூறப்படுகிறது. இதனிடையே, அவர் வெளியேறுவதற்கான சரியான விதிமுறைகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்றும், அடுத்த சில மாதங்களில் உறுதி செய்யப்படும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. 24 வயதான எம்பாப்பே Real Madrid அணிக்கு செல்வார் என்றே கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் முன்வைக்கும் ஒப்பந்தத்தில் எம்பாப்பே திருப்தியாக இல்லை என்றே கூறப்படுகிறது. Liverpool மற்றும் Arsenal அணி நிர்வாகமும், எம்பாப்பே மீது குறி வைத்துள்ளதாகவே கூறப்படுகிறது.

## கெல்வின் கிப்டம் விபத்தில் அகால மரணம்




கென்ய ஓட்டப்பந்தய வீரர் கெல்வின் கிப்டம் சாலை விபத்தில் பரிதாபமாக பலியானார். ஆபிரிக்க நாடான கென்யாவைச் சேர்ந்த மாரத்தான் ஓட்டப்பந்தய வீரர் கெல்வின் கிப்டம் (Kelvin Kiptum). 24 வயதான இவர் சிகாகோவில் நடந்த மாரத்தான் போட்டியில் பந்தய தூரத்தை 2 மணி 35 வினாடிகளில் (42 கிலோ மீற்றர்) கடந்து உலக சாதனை படைத்தார்.

ஸ்பெயின், லண்டன் மாரத்தான் போட்டிகளிலும் முதலிடம் பிடித்து சாதித்த கெல்வின், வரும் ஜூலை, ஒகஸ்ட் மாதம் பாரிசிஸ் நடைபெறும் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் கென்யாவில் இரவு பயிற்சியை முடித்துவிட்டு கெல்வின் தனது பயிற்சியாளர் மற்றும் பெண்ணொருவருடன் காரில் வீட்டுக்கு சென்றார். அப்போது திடீரென அவரது கார் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் தாறுமாறாக ஓடிய கார், கால்வாயில் இறங்கி பின் மரத்தில் அதிவேகத்தில் மோதியது.

இந்த விபத்தில் படுகாயம் அடைந்த கெல்வின் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அவருடன் பயிற்சியாளரும் பலியாக, குறித்த பெண் காயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கெல்வின் கிப்டமின் மரணம் கென்யாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், அந்நாட்டு ஜனாதிபதி மற்றும் உலக தடகள சங்க தலைவர் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# உலக வலம்

## அமெரிக்காவில் பரவும் புதிய வகை வைரஸ்



அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் கடந்த பல ஆண்டுகளாக அலாஸ்காபாக்ஸ் என்ற வைரஸ் கண்டறியப்பட்டது. இந்த வைரஸால் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சமீபத்தில் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

இதன் மூலம் அலாஸ்காபாக்ஸ் பலருக்கு பீதியை ஏற்படுத்தியுள்ளது. இது விலங்குகள் மற்றும் மனிதர்களை பாதிக்கும் ஒரு வகை வைரஸ் ஆகும். அவை ஆர்த்தோபாக்ஸ் வைரஸ் வகையைச் சேர்ந்தவை என்பதால், தோல் புண்கள் அல்லது தடிப்பை ஏற்படுத்துகின்றன. இந்த வகை வைரஸ்கள் ஒவ்வொன்றும் அதன் சொந்த குணாதிசயங்களைக் கொண்டுள்ளன. இவற்றில் சில மிகவும் ஆபத்தானவை. 2015ஆம் ஆண்டில், அலாஸ்காவின் ஃபேர்பேங்க்ஸ் அருகே வசிக்கும் ஒரு பெண்ணிடம் அலாஸ்காபாக்ஸ் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

## ஐக்கிய அரபு அமீரகத்தில் ஒளிர்ந்த மூவர்ண கொடி

ஐக்கிய அரபு அமீரகத்துக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடிக்கு வரவேற்பு அளிக்கும் விதமாக, துபாயில் அமைந்துள்ள உலகின் உயரமான கட்டடமான புர்ஜ் கலிஃபாவில் இந்தியாவின் மூவர்ண கொடி கடந்த செவ்வாய்க்கிழமை ஒளிரவிடப்பட்டது. துபாயில் நடைபெறும் "உலக அரசாங்க மாநாடு 2024இல்" சிறப்பு விருந்தினராக பங்கேற்க 2 நாள் அரசுமுறைப் பயணமாக ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபிக்கு பிரதமர் மோடி சென்றார். அந்நாட்டு அதிபர் முகமது பின் சையத் அல் நஹ்யானுடனான பிரதமரின் பேச்சுவார்த்தையில் இரு நாடுகள் இடையே 10 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

இந்நிலையில், பிரதமர் மோடிக்கு வரவேற்பு அளிக்கும் விதமாக அந்நாட்டில் உள்ள உயரமான கட்டடமான புர்ஜ் கலிஃபாவில் இந்தியாவின் மூவர்ண கொடி செவ்வாய்க்கிழமை இரவு ஒளிரவிடப்பட்டது. மேலும், "இந்திய குடியரசின் சிறப்பு விருந்தினரே வருக! வருக! என்ற வாசகமும் அதில் இடம்பெற்றிருந்தது.




இந்தப் புகைப்படங்களைப் பகிர்ந்து, துபாய் இளவரசர் ஷேக் ஹம்தான் பின் முகமது பின் ரஷீத் அல் மக்தௌம் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "நிகழாண்டு உலக அரசாங்க மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந்திய குடியரசின் சிறப்பு விருந்தினர் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை அன்புடன் வரவேற்கிறோம். நமது நாடுகளுக்கிடையே உள்ள வலுவான உறவுகள் சர்வதேச ஒத்துழைப்புக்கு முன்மாதிரியாக விளங்குகின்றன" எனக் குறிப்பிட்டிருந்தார்.

## மாலைதீவிலிருந்து வெளியேற்றப்பட்ட வெளிநாட்டவர்கள்

விசா விதிமீறல், போதைப்பொருள் பயன்பாடு உள்ளிட்ட குற்றச்சாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 186 பேர் மாலைதீவில் இருந்து அந்நாட்டு அரசால் வெளியேற்றப்பட்டனர். வெளியேற்றப்பட்டவர்கள் பட்டியலில் அதிகபட்சமாக வங்கதேசத்தைச் சேர்ந்த 83 பேர் உள்ளனர். இதற்கு அடுத்து 43 இந்தியர்கள், இலங்கையைச் சேர்ந்த 25 பேர், நேபாளத்தைச் சேர்ந்த 8 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஆனால், அவர்கள் வெளியேற்றப்பட்ட திகதி குறித்த விபரம் இடம்பெறவில்லை. இது தொடர்பாக உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் அலி லதீஹான் செய்தியாளர்களிடம் கூறுகையில், "வெவ்வேறு பெயர்களைப் பயன்படுத்த மாலைதீவில் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டவர்கள் குறித்து பொருளாதாரத் துறை அமைச்சகத்துடன் இணைந்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம்.

இதில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத தொழில்களும் அடங்கும். சில தொழில்கள் மாலைதீவைச் சேர்ந்தவர்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டு வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுகிறது. இதுபோன்ற தொழில் அமைப்புகளை மூடி, அதில் தொடர்புடைய வெளிநாட்டவர்களை வெளியேற்றும் பணியில் உள்துறை அமைச்சகம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த 186 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். வெளிநாட்டவர்கள் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்க வாரத்தில் மூன்று முறை வரை பொலிஸார் திடீர் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். எந்த குறிப்பிட்ட பிரிவினரையும் குறிவைத்து இந்த சோதனை நடைபெறவில்லை" என்றார்.



## ஜப்பானிலும் பொருளாதார வீழ்ச்சி

உலக பொருளாதாரத்தில் தற்போது அமெரிக்கா முதல் இடத்திலும், சீனா இரண்டாவது இடத்திலும், ஜப்பான் மூன்றாவது இடத்திலும் இருந்தன. இந்த நிலையில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மந்த நிலை காரணமாக தற்போது ஜப்பான் 3வது இடத்திலிருந்து சரிந்து 4வது இடத்திற்கு சென்றுள்ளது. இதனைத் தொடர்ந்து ஜெர்மனி 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. மேலும் இந்தியா ஐந்தாவது இடத்தில் தன்னை தக்கவைத்துக்கொண்டது.



ஜப்பானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) முந்தைய காலாண்டில் 3.3% ஆக சரிவடைந்த நிலையில் கடந்த ஒக்டோபர்-டிசம்பர் காலண்டில் 0.4% சரிந்தது. ஐ.எம்.எஃப் என அழைக்கப்படும் சர்வதேச நிதி கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள தரவுகளின் படி ஜப்பானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவு 4291 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என கணக்கிட்டுள்ளது. அதேநேரத்தில் ஜெர்மனியின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4,730 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதனடிப்படையில் ஜப்பான் 4வது இடத்திற்கு சரிந்து ஜெர்மனி 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

உள்நாட்டுத் தேவையின் முக்கிய தூண்களான நுகர்வு மற்றும் மூலதனச் செலவினங்களில் உள்ள மந்தம்தான் பொருளாதார சரிவிற்கான முக்கிய காரணங்கள் என ஜப்பானிய பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலைமை நீடித்தால் மேலும் அடுத்தடுத்த காலாண்டில் பொருளாதாரம் 1.4% சரிவைச் சந்திக்கும் எனவும் எச்சரித்துள்ளனர். ஏற்கனவே வரும் 2030 ஆம் ஆண்டில் ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளை பின்தள்ளி உலக பொருளாதாரத்தில் இந்தியா மூன்றாவது இடத்தையும், ஆசியாவில் இரண்டாவது இடத்தையும் விரைவில் பிடிக்கும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். இந்த நிலையில் ஜப்பானின் வீழ்ச்சியை உலக நாடுகள் உற்று நோக்கி வருகின்றன.

## பாகிஸ்தானின் புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரீப்



பாகிஸ்தானில் கடந்த (08.02.2024) ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. பல்வேறு அரசியல் சிக்கல்களுக்கு இடையே நாடு தவித்து வரும் நிலையில், அந்நாட்டு பொதுத் தேர்தலை சந்திக்கிறது. இந்தத் தேர்தலில், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லீக் மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் போட்டியிட்டன. இதனிடையே, பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டிருக்கும் முன்னாள் கிரிக்கெட் வீரரும், தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான்கானுக்கு, 30 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை விதித்து பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

மேலும், அவரது மனைவி புஷ்ரா பிபிக்கும் இந்த வழக்குகளில் தொடர்பு இருப்பதாகக் கூறி 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. மேலும், இம்ரான்கானின் பாகிஸ்தான் தெக்ரீக்-இ-இன்சாப் கட்சிக்கு தேர்தலில் போட்டியிடத் தடை விதித்திருந்தது. இதனால், அக்கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்கள் சுயேட்சையாகப் போட்டியிட்டனர். இந்தத் தேர்தலில், மொத்தமுள்ள 265 நாடாளுமன்றத் தொகுதிகளில் பெரும்பான்மைக்கு 133 தொகுதிகளில் வெற்றி பெற்றால் ஆட்சி அமைக்கலாம்.

அதன்படி, காலை 8 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் தெக்ரீக் - இ - இன்சாப் கட்சித் தலைவர் இம்ரான் கான் ஆதரவு சுயேட்சை வேட்பாளர்கள் 101 இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றனர். அதேபோன்று, முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் நவாஸ் கட்சி 75 இடங்களைக் கைப்பற்றியது. பிலாவல் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 தொகுதிகளைக் கைப்பற்றியது.

இந்த பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் கூட்டணி ஆட்சி அமையவே வாய்ப்பு இருப்பதாகக் கூறப்பட்டது. தேர்தல் நடந்து ஐந்து நாட்கள் ஆன பிறகும், புதிய அரசை அமைப்பதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வந்தது. இந்த நிலையில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் நவாஸ் கட்சியும், பிலாவல் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சியும் கூட்டணி ஆட்சி அமைக்க முடிவு செய்தது.

அந்த வகையில், நவாஷ் ஷெரீபின் சகோதரரும் முன்னாள் பிரதமருமான ஷெபாஸ் ஷெரீப் பாகிஸ்தான் பிரதமராக பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இம்ரான் கானின் தெக்ரீக் - இ - இன்சாப் கட்சி எதிர்க்கட்சியாக இருக்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மடகாஸ்கரில் கொண்டுவரப்பட்ட புதிய சட்டம்

கடந்த ஆண்டு 600 சிறுமிகள் / குழந்தைகளின் பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், நடப்பு ஆண்டில் கடந்த ஜனவரி மாதம் மட்டும் 133 சிறுமிகள் / குழந்தைகளின் பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குற்றங்களை தடுக்கவும், குற்றவாளிகளுக்கு தண்டனையை அதிகரிக்கவும் மடகாஸ்கர் அரசாங்கம் அதிரடி முடிவெடுத்துள்ளது. அதன்படி, பாலியல் வன்கொடுமை குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கம் செய்ய மடகாஸ்கர் அரசு சட்டம் கொண்டுவந்துள்ளது. அதன்படி குற்றவாளிகளுக்கு ரசாயன ரீதியிலும், அறுவை சிகிச்சை மூலமாகவும் ஆண்மை நீக்கம் செய்ய வகை செய்யும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டம் மடகாஸ்கர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் 150 ஆண்டுகள் வரை வாழும் மக்கள்



இன்றைய காலகட்டத்திலும் பாகிஸ்தானின் ஹன்சா பகுதியில் வாழும் மக்கள் ஆரோக்கியமாக 150 வயது வரை வாழ்கிறார்கள் என்ற செய்தி ஆச்சரியத்தையும் பல கேள்விகளையும் எழுப்புகிறது. வாழ்க்கையை அனுபவிக்க ஒருவர் எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறார் என்பது முக்கியமானது.

நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ வேண்டுமென்ற ஆசை அனைவருக்கும் இருந்தாலும், மாறிவிட்ட இன்றைய காலச்சூழலில், இளம் வயதிலேயே சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம் போன்ற நாட்பட்ட நோய்கள் வருவதும் அதிகரித்து, ஆயுளை குறைக்கின்றன.

பாகிஸ்தானின் ஹன்சா பள்ளத்தாக்கில் வசிக்கும் ஹன்சா சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 100 முதல் 150 ஆண்டுகள் வரை வாழ்கின்றனர் (Hunza Longevity).

இந்தப் பள்ளத்தாக்கில் வசிப்பவர்கள் 70 வயது வரை இளமையாக இருப்பது ஒருபுறம் என்றால், பெண்கள் 65 வயதிலும் குழந்தைகளைப் பெற்றெடுக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களின் நீண்ட ஆயுளின் ரகசியம் என்னவென்று தெரிந்து கொள்வதற்கு முன், உலகின் பிற பகுதிகளில் வாழபவர்களின் ஆயுள் குறைவாக இருப்பதற்கு காரணம் என்ன என்பதைத் தெரிந்துகொள்வோம்.

இங்குள்ள மக்கள் பனிப்பாறையில் இருந்து உருகிவரும் தண்ணீரைக் குடிக்கின்றனர். அதுமட்டுமல்ல, ஆண்டில் 2 முதல் 3 மாதங்கள் வரை உணவு உண்பதில்லை. இந்த உண்ணாவிரத காலத்தில், நீராகரம் மட்டுமே பருகுவார்கள்.

ஹன்ஸா சமூகத்தினரின் வாழ்க்கை முறை, அதிக தொலைவு நடப்பது, பழங்கள், பச்சை காய்கறிகள், உலர் பழங்கள், பால் மற்றும் முட்டைகளை உள்ளடக்கிய உணவு என இவர்களது வாழ்க்கை மற்றும் உணவு முறையே, 70 வயதிலும் இளமையுடன் இருப்பதற்கும், 150 வயது வரை வாழ்வதற்கும் மிகப்பெரிய காரணம்.



# பிளாஸ்டிக் பொருட்களில் அழகிய துடைப்பம்

கம்போடியாவில் ஒருமுறை பயன்படுத்தி வீசப்படும் பிளாஸ்டிக் பொருட்களில் இருந்து அழகிய துடைப்பம் தயாரித்து வருவாய் ஈட்டுகின்றனர்.

அங்கு தினசரி 5 ஆயிரம் பிளாஸ்டிக் போத்தல்கள் என்ற சராசரியில் கடந்த ஓராண்டில் 44 டன் பிளாஸ்டிக்கை பயன்படுத்தி துடைப்பங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தலைநகர் நாம்பென் மட்டும் தினசரி சுமார் 38,000 டன் பிளாஸ்டிக் கழிவு களை வெளியிடும் நிலையில், துடைப்பம் தயாரிப்பு, தமக்கு சிறந்த வருமானம் ஈட்டித்தருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.




# பழமையான முட்டை கண்டுபிடிப்பு

இங்கிலாந்தின் வடக்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள பெர்ரி∴பீல்ட்ஸ் எனும் இடத்தில் 1700 ஆண்டுகள் பழமையான முட்டை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஒக்ஸ்போர்ட் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த முட்டையை ஆய்வு செய்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், முட்டையின் உள்ளே மஞ்சள் கருவும் வெள்ளை கருவும் இன்னும் இயற்கையாக பாதுகாக்கப்படும் விடயமானது ஆச்சரியமளிப்பதாகவும் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் இங்கிலாந்தின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் எட்வர்ட் பிடுல்∴ப் கருத்து தெரிவிக்கையில், "மனித தலையீடு இல்லாமல் 1,700 ஆண்டுகளுக்குப் பிறகு இயற்கையாகப் பாதுகாக்கப்பட்ட மஞ்சள் கரு மற்றும் வெள்ளைக் கருவைக் கொண்ட உலகின் ஒரே முட்டை இதுவாகும்.

மேலும், இந்த முட்டை எந்த பறவை இனத்தினுடையது என்பது பற்றி மேலும் அறிய ஒரு தனித்துவமான வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்நிலையில், கென்ட் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியை மேற்கொண்டபோது முட்டைக்குள் உள்ள திரவ உள்ளடக்கத்தை உறுதிப்படுத்த முடிந்தது" என கூறியுள்ளார்.










இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 18.02.2024 அன்று வெளியிடப்பட்டது.